# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 26 திங்கட்கிழமை (11-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:220


## கொழும்புத்துறையில் படையினர் புதிதாக நேற்றுக்காலை தாக்குதல்

கொழும்பு,செப்.11

கொழும்புத்துறையில் நேற்றுக்காலை இராணுவ நடவடிக்கை ஒன்றை புதிதாக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டதாக பாதுகாப்பமைச்சின் நடவடிக்கைத் தலைமைச்செயலகம் நேற்று இரவு விடுத்த செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட "சூரியக்கதிர்" நடவடிக்கையின் போது படையினர் கொழும்புத்துறைப் பகுதியில் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த பிரதேசத்தை மேலும் விஸ்தரிப்பதற்காகவே நேற்றைய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை நேற்றுக்காலை 6.15மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 10.00மணிக்கு முடிவடைந்ததாகவும் -

படையினர் சுமார் 3 சதுரக் கிலோமீற்றர் பிரதேசத்தை புதிதாக தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்ததன் மூலம் தமது முன்னணிப்பாதுகாப்பு அரணை நாவற்குழிக்குச் சமீபமாக அமைக்க முடிந்தது என்றும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## 14 சடலங்கள் ஒப்படைப்பு

செம்மணி மற்றும் புத்தூர்ப்பகுதிகளில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் உயிரிழந்ததாகத் தெரிவித்து 14 சடலங்கள் நேற்றிரவு 10.45 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் படையினரால் ஒப்படைக்கப்பட்டன.

இவற்றில் 6 சடலங்கள் பெண்களுடையவை. ஏனையவை ஆண்களுடையவை. இனங்காண அவை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பில் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு,செப்.11

கடந்த 2ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவன் மகாலிங்கம் சந்திரமோகனை விடுவிக்கக் கோரி மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவர்கள் இன்று முதல் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் த.மகாசிவம் கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (இ-8)

# பொ.ம.ஐ.முன்னணி வேட்பாளர் செழியனும் அமைப்பாளர் மனோவும் சுட்டுக்கொலை!

## மட்டக்களப்பு மாவட்டம் பாண்டிருப்பில் சம்பவம்

- அம்பாறை மாவட்டச் செய்தியாளர் ஏ.எல்.எம்.சலீம் -

அம்பாறை,செப்ரெம்பர்11

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் மேயருமான செழியன் பேரின்பநாயகமும் -**

**பொ.ம.ஐ.முன்னணியின் அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேச அமைப்பாளர் எஸ்.மனோகரன் பிள்ளையும் -**

**நேற்று முற்பகல் பாண்டிருப்பில் இனந்தெரியாத இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இறந்த இருவரின் நெற்றிகளிலும் துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் காணப்பட்டன.**

சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து பாண்டிருப்புக் கிராமத்தில் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பாண்டிருப்பு இரண்டாம் பிரிவு கந்தப்பர் வீதியில் உள்ள பொதுமக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயணச்சீட்டுப் பெறுவதற்குப் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,செப்.11

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டுவரும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் பயணிகள் கடைப்பிடிக்க வேண்டிய புதிய நடைமுறைகள் தொடர்பான விவரங்களை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று அறிவித்துள்ளது.

செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் இடம்பெறும் சேவைகளுக்கான பயணச்சீட்டுக்கள் அதற்கு முதல் நாள்களில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பயண அனுமதி மற்றும் பயண ஏற்பாடுகள் தொடர்பான பணிகள் வாரத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்இடம்பெறுமென்று சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-3)

## தொழில் அமைச்சர் சென்ற வாகன அணி மீது தாக்குதல்

### ஐவருக்கு துப்பாக்கிச் சூட்டுக்காயம்

கொழும்பு,செப்.11

தொழில் அமைச்சர் ஜோன் செனவிரத்ன சென்ற வாகன அணி மீது கலவானயில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் ஐவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகினர்.

எனினும் அமைச்சர் செனவிரத்ன காயம் எதுவும் இன்றித் தெய்வாதீனமாகத் தப்பினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதிச் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியின் ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## அமைச்சர்கள், கட்சித் தலைவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்குவதற்கு முடிவு

### புலிகளின் தற்கொலைப் படையினர் கொழும்புக்குள் ஊடுருவலாம்

கொழும்பு,செப்.11

தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடும் சிரேஷ்ட அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாகக் கிடைத்துள்ள தகவலை அடுத்து அவர்களுக்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் ஒத்துழைப்புடன் கூடுதல் பாதுகாப்பு வழங்குவதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அலரிமாளிகையில் கடந்த வெள்ளி இரவு நடந்த உயர்மட்ட மாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு உயரதிகாரிகள் இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

தேர்தல் கூட்டங்களில் பங்குபற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியோரை விடுதலைப்புலிகள் இலக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்களை நாடு கடத்த வேண்டாம்

### ஜேர்மனியிடம் கூட்டணி கோரிக்கை

கொழும்பு,செப்.11

ஜேர்மனியில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களை நாடுகடத்தும் திட்டத்தை மனிதாபிமான அடிப்படையில் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட துணைத்தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜேர்மன் பிரதி வெளிவிவகார அமைச்சர் திருமதி சன்ரக்கிடம் கோரியுள்ளார்.

ஜேர்மனியில் நான்கு தமிழர்கள் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதம் தொடர்பாக அவருக்கு ஆனந்தசங்கரி நேற்று அனுப்பிய அவசர

(12ஆம் பக்கம் பார்க்க)

## தோப்பூரில் தாக்குதல்

திருகோணமலை,செப்.11

தோப்பூரில் இருந்து மூதூர் பஸ் நிலையம் நோக்கி ஓட்டோவில் சென்று கொண்டிருந்த படையினர் மீது நேற்றுக்காலை 9.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு படையினரும், ஓட்டோ சாரதியும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குருநாகலைச் சேர்ந்தவர்களான லலித் சில்வா, சந்திரசிறி ஆகியோரே உயிரிழந்த படையினராவர். (இ-3-8)

## பூவரசங்குளம் பகுதியில் தாக்குதல்

வவுனியா,செப்.11

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிகிறது. இதில் படையினர் தரப்பில் ஒருவர் காயமடைந்தார். (ஜ-164)

## இராணுவப் பேச்சாளர் மறுப்பு

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்ன உதயன் 06-09-2000ஆம் திகதிய இதழில் முன்பக்கத்தில் வெளியான "கொழும்புத்துறையில் தேவையான பகுதிகளை மீட்டுவிட்டோம்" என்ற செய்தி குறித்து மனவேதனை தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தச் செய்தியில் -

"இந்த நடவடிக்கையின்போது பெற்ற பலனைவிட உயிரிழப்பு அதிகம் என்பதனை மறுக்க முடியாது" என்று தாம் கூறியதாக வெளியிடப்பட்டமை தவறு என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எமது கொழும்புச் செய்தியாளரிடம் தாம் அவ்வாறு தெரிவிக்கவில்லை எனவும் அவர் மறுத்துள்ளார்.

தொடர்புப் பரிமாற்றத் தவறினால் ஏற்பட்ட கருத்து மாற்றத்துக்கு வருந்துகின்றோம்.

- ஆசிரியர்

## சூரியக் கதிர் நடவடிக்கைக்கு யார் பொறுப்பு? பதவி விலகத் தயார் என்கிறார் தளுவத்த!

கொழும்பு,செப்.11

கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட -

125க்கு மேற்பட்ட இராணுவத்தினரின் உயிரிழப்புக்குக் காரணமான - சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கைக்குத் தான் பொறுப்பு என்று கருதப்பட்டால் அதற்காகத் தனது பதவியை ராஜினாமாச் செய்யத் தயார் என்று பாதுகாப்புத் துறைக்கான சிரேஷ்ட அதிகாரி ஜெனரல் ரொஹான் தளுவத்த தெரிவித்திருக்கின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த இராணுவ நடவடிக்கையின் விளைவுகள் குறித்து பாதுகாப்புக் கவுன்சிலில் கூடி ஆராய்ந்தபோதே அங்கு இவ்வாறு தளுவத்த அறிவித்ததாகத் தெரியவந்தது.

இந்த இராணுவ நடவடிக்கைக்கு யார் பொறுப்பு ஏற்பது என்ற கேள்வியை பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த இந்தக் கூட்டத்தில் கிளப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே தாம் பொறுப்பு என்றால் பதவி விலகத் தயார் என்று தளுவத்த தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.

யாழ். நகரைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள படையினர் அதன் தென்புறத்தில் உள்ள தமது எல்

(12ஆம் பக்கம் பார்க்க)

உரும்பிராய்

## கருணாகரப்பிள்ளையார் கோயில்

நாளை 12-09-2000 செவ்வாய்க்கிழமை

# தேர்த்திருவிழா

**முற்பகல் :- விசேட மேளக் கச்சேரி**

இணுவில் சண்முகராஜன் குழுவினர்

1. இசைப்பேரறிஞர் வி.எம். பஞ்சாபிகேசன் குழுவினர்
2. நாதஸ்வர சாகரம் ஆர்.கேதீஸ்வரன் குழுவினர்
3. கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர்
4. தவில் வித்துவான் கே.ஜெயராமன் குழுவினர்

பிற்பகல் 1.30 மணி :- வசந்தமண்டபப் பூசை

கருணாகரப் பிள்ளையார் திருவீதி வலம்வருதல்

மாலை 5 மணி - தேரடித் திருவிழா

விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்றிக் கருணாகரப்பிள்ளையாரை வழிபாடு செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் அடியார்களை அன்புடன் வேண்டுகிறோம்.

**- தேர்த்திருவிழா உபயகாரர்கள்.**

*கருணாகரப்பிள்ளையார் கோயில்,*
*உரும்பிராய்.* (78272)

## மாநாட்டில் கலந்துகொள்ள பயணம்

யாழ்ப்பாணம்,செப்.11

இராமாயணம் - மகாபாரதம் தொடர்பான இரண்டாவது உலக மாநாடு இந்தோனேசியாவின் பாலித்தீவில் உள்ள உதயண பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

பல நாடுகளில் இருந்தும் தமிழ் அறிஞர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ். பல்கலைக் கழகப் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் நாளை இங்கிருந்து பயணமாகிறார்.

இராமாயணம் - மகாபாரதம் தொடர்பான முதலாவது மாநாடு மலேசியாவில் நடைபெற்றது.

(ஐ)

## விற்பனைக்கு

யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட

★ YAMAHA V 90

★ MATE (Newsmate) YCLS 50

**மோட்டோர் சயிக்கிள்கள்**

குறைந்த விலையில் மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## ஈஸ்வர பகவான் அன் கம்பனி

**91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி எண் - 2350 (78273)

## உள்ளூர் உற்பத்திப் பொருள்களை திருகோணமலை, கொழும்புக்கு ஏற்றுவோர்

# கவனத்துக்கு

தற்போது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'பொல் கொட்' கப்பலுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்களான வெங்காயம், புகையிலை, பனம்பொருள்களையும் ஏனைய பொருள்களையும் ஏற்ற விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும். இக்கப்பல் இரண்டு நாள்கள் மட்டுமே தரித்துநிற்கும் என்பதனையும், இக்கப்பல் திருகோணமலைக்கு மட்டுமே பொருள்களை எடுத்துச் செல்லும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

**வேல் றேட் சென்ரர்**

114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி- 2822

**E.R. ரான்ஸ்போட் சேவிஸ்**

ஒடை லேன், பருத்தித்துறை. (78271)

## நாகம்ஸ்
சுன்னாகம்

12 ஆம் திகதி வரை

அஜித் - ஷாலினி

நடிப்பில்

## அமர்க்களம்

(ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.) (C/12880)

## ராஜா
(யாழ்ப்பாணம்)

ரசிகர்களே! கடைசிவாரமாக

கார்த்திக், கௌசல்யா, அப்பாஸ், ஹீரா, ராதாரவி

மற்றும் பலரின் நடிப்பில்

## பூவேலி

காட்சிகள்: 10.30, 2.00

(புதிய நேரம்) (C/12125)

## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் ப.நோ.கூ. சங்க

7 ஆம் கிளையின் தலைவர்

**விநாசித்தம்பி மயில்வாகனம் நவரத்தினம்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்**
**7 ஆம் கிளை,**
**கிளைக்குழு 2 உறுப்பினர்கள்.**

*உடுவில்.* (78274)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் இரண்டாம் வருட ஆரம்பக்கல்வி 'A' பிரிவைச்சேர்ந்த சக ஆசிரிய மாணவியான

**செல்வி றஞ்சிதமலர்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் வீரகத்தி நாகராஜா**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆரம்பக்கல்வி A பிரிவு,**
**இரண்டாம் வருட**
**ஆசிரிய மாணவர்கள்.**

(78380)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை ஆசிரிய மாணவி

**செல்வி றஞ்சிதமலர்**

(ஆரம்பக்கல்வி 2A)

அவர்களின் அன்புத் தந்தையார்

**வீரகத்தி நாகராஜா**

அவர்களின்பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**கலாசாலைச் சமூகம்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**

(78278)

# * சந்தியா மல்ரி கோட்யாட் *

**பிரதான வீதி, பண்டத்தரிப்பில்...**

இன்று (11-09-2000) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு தனது கிளை வியாபார ஸ்தாபனத்தைத் திறக்கவுள்ளது.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**- சந்தியா -**

அழகுசாதன, அன்பளிப்பு, பாடசாலைப் பொருள்கள், எவர்சில்வர், சென்ற் வகைகள், அழகிய வர்ணப் படங்கள், பாதணி வகைகள், வாழ்த்து மடல்கள், 'பாக்' வகைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், கை, மேசை, சுவர் மணிக்கூடுகள்,

Fevicryl Paint, Acron Paint Items

மற்றும்

பட்டின், பக்கிள் கவரிங் செய்து பெற்றிடவும்

*நீங்கள் நாடவேண்டிய இடம்*

# சந்தியா மல்ரி கோட்யாட்

**பிரதான வீதி,**
**பண்டத்தரிப்பு.**

**பிரதான வீதி,**
**சங்கானை.**

(78260)

## மரண அறிவித்தல்

**நாகரத்தினம் வாமதேவன்**

(இளைப்பாறிய முன்னாள் அதிபர்,ஆயுள்வேதக்கல்லூரி)

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும், புங்கன்குளம் றோட், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.வாமதேவன் நேற்று 10.09.2000 காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி நாகரத்தினத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையாவின் அன்பு மருமகனும், தபோநிதியின் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.க.ம.மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், நிரஞ்சினியின்(கனடா) அன்புத் தந்தையும், வித்தியாதரனின்(கனடா) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11-09-2000) திங்கட்கிழமை 1 மணியளவில் "போகஸ்தான்" மானிப்பாய தெற்கு, மானிப்பாய் என்னும் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி த. வாமதேவன**
(மனைவி)

தற்போதைய முகவரி -
*"போகஸ்தான்"*
*வயிரவர் கோயில்லேன்,*
*மானிப்பாய் தெற்கு , மானிப்பாய்.*

(78279)



மாமனிதர்

காங்கேசன்துறை பட்டினசபை முன்னாள் உபதலைவரும், சீமெந்துக் கூட்டுத்தாபன தொழிற்சங்க முன்னாள் தலைவரும், மயிலிட்டிப் பிரசைகள்குழு முன்னாள் தலைவருமான

## திரு. விஜயரத்தினம் இரத்தினராசா

அவர்களை ஆதரியுங்கள்!

உரிமை உணர்வின் சின்னம் - வெல்லும் சின்னம் சைக்கிள்

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**



X



மக்கள் தொண்டன்

(78201)

## பேச்சைத் தொடர இஸ்ரேல் ஆர்வம்;

# சுதந்திர தனிநாடு பிரகடனம் குறித்து பலஸ்தீன தேசிய சபை ஆலோசனை!

காசா,செப்ரெம்பர்.11

**மேற்காசியப் பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடர இஸ்ரேல் ஆர்வம் காட்டுவதை அடுத்து சுதந்திர தனிநாட்டை பிரகடனப்படுத்துவது தொடர்பாக பலஸ்தீன தேசிய சபை ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்துகிறது. தனிநாட்டு பிரகடனம் ஒத்திப் போடப்படலாம் என்று நம்பப் படுகிறது.**

எதிர்வரும் 13ஆம் திகதி சுதந்திரப் பலஸ்தீன தனிநாட்டைப் பிரகடனப்படுத்துவது என்ற பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் அறிவிப்பை குறிப்பிட்ட திகதியில் செயற்படுத்துவது குறித்து இறுதி முடிவை எடுக்க பலஸ்தீன தேசிய சபை கூடியுள்ளது.

அந்தக் கூட்டத்தில் பேசிய அரபாத், தனிநாடு பிரகடனத்தை பிற்போடலாம் என்றும் -

இஸ்ரேலுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான காலக்கெடுவை மேலும் இரண்டு மாதங்கள் நீடிக்கலாம் என்றும் கூறியுள்ளதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் மேற்காசிய பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க இஸ்ரேல் ஆர்வமாக இருப்பதாகவும், இது குறித்து அமெரிக்க அதிபர் கிளின்ரனுடன் இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் ஆலோசனை நடத்தியதாகவும கூறப்படுகிறது.

மேற்காசியப் பிரச்சினைக்கு உடன்பாடு ஏற்படுத்த பலஸ்தீனமும், இஸ்ரேலும் செப்ரெம்பர் 13 ஆம் திகதி வரை காலநிர்ணயம் விதித்து நடத்தியபேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததும் -

அதனால் செப்ரெம்பர் 13 ஆம் திகதி சுதந்திர பலஸ்தீன தனி. நாட்டை பிரகடனப்படுத்தப் போவதாக யசீர் அரபாத் அறிவித்திருந்ததும் தெரிந்தவையே. (ஒ)

## 'பர்தா' அணியாத இரு பெண்களுக்கு காஷ்மீரில் காலில் சூட்டு தண்டனை!

ஸ்ரீநகர்,செப்.11

காஷ்மீரில் 'பர்தா' அணியாத குற்றத்திற்காக இரு இஸ்லாமியப் பெண்கள் காலில் சுடப்பட்டனர்.

ஜம்மு-காஷ்மீரில் 'பர்தா' அணியாமல் நடமாடும் இஸ்லாமியப் பெண்கள் காலில் சுடப்படுவார்கள் என்றும் -

மத்திய அரசு மேற்கொள்ளும் சனத்தொகைக் கணக்கெடுப்புப பணியில் ஈடுபடும் ஊழியர்கள் கொல்லப்படுவார்கள் என்றும் -

லஸ்கர்.இ.தொய்பா இயக்கம் சமீபத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதனையடுத்து -

காஷ்மீரில் அழகு நிலையம் ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த பர்தா அணியாத இரு இஸ்லாமியப் பெண்கள் தீவிரவாதிகளால் காலில் சுடப்பட்டு காயமடைந்தனர்.

இந்தச்சம்பவத்தை அடுத்து 20 ஆண்டுகளின் பின்னர் மத்திய அரசு காஷ்மீரில் நடத்தும் சனத்தொகைக் கணக்கெடுப்பு பணிகளும் தேக்க நிலையை அடையக்கூடும் என்று கருதப்படுகிறது.

சனத்தொகைக் கணக்கெடுப்புக்கு ஹிஸ்புல் முஜாஹிதீன்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட யானையின் படிமம் கண்டுபிடிப்பு!

ஸ்ரீநகர்,செப்.11

காஷ்மீரில் 50ஆயிரம் ஆண்டுகள் பழமையான யானையின் புதை படிமம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இமயமலைப் பகுதி பலஆயிரம் ஆண்டுகளின் முன்னர் சமதரையாக இருந்ததாகவும், புவியியல் மாற்றத்தினால் அந்தப் பிரதேசம் உலகில் அதிஉயர்ந்த மலைகளைக் கொண்ட பகுதியாக மாறிவிட்டதாகக் கருதப்பட்டு வருவதற்கு கண்டுபிடிக்கப்பட்ட யானையின் புதை படிமம் உறுதி சேர்ப்பதாகக் கூறப்படுகிறது.

புராதன காலத்தில் வனவிலங்குகள் அதிகம் வாழ்ந்த 'சிவாலிக்' மலைப்பகுதியில் இறந்த விலங்குகளின் புதைபடிமங்கள் அதிக அளவில் கிடைக்கும் வாய்ப்புகள் தென்படுவதாகக் காஷ்மீர் அகழ்வாராய்ச்சி மைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க அதிபர் கிளின்ரனும் மகள் செல்ஸாவும் மகிழ்ச்சியான ஒரு தருணத்தில்....

## கிளின்ரன் மகள்: செல்ஸாவின் புதிய ஆண்நண்பர் அதிபரிடம் பணிபுரிகிறாராம்!

வாஷிங்ரன்,செப்.11

அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனின் 19வயது மகள் செல்ஸாவின் புதிய ஆண்நண்பர் வெள்ளைமாளிகையில் பணிபுரிவதாகக் கூறப்படுகிறது.

21 வயதான ஜெர்மிகேன் என்ற அந்த இளைஞரும் செல்ஸாவும் 'ஸ்டான் போர்ட்' பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவர்கள் என்றும், கேன் தற்போது அதிபர் அலுவலகத்தில் உரைகள் தயாரிக்கும் பிரிவில் பணிபுரிவதாகவும் அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த வருடம் பல இடங்களில் இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து காணப்பட்டனர்.கலிபோர்னியாவைச் சொந்த ஊராகக் கொண்ட கேன் இப்போது வாஷிங்ரனிலேயே தங்கியுள்ளார். அவர் இங்கு தங்கியிருப்பதும், வெள்ளை மாளிகையில் பணிபுரிவதும் செல்ஸாவின் ஏற்பாடு என்று கருதப்படுகிறது.

செல்ஸாவின் முன்னாள் ஆண்நண்பர் மத்தியூ பியர்ஸ் போலவே கேனும் சிறந்த நீச்சல் வீரர் ஆவார். நாட்டில் புகழ்பெற்ற நீச்சல் குழுவில் உறுப்பினராகவும் அவர் உள்ளார்.

வெள்ளைமாளிகையில் பணிபுரிந்த மோனிகாலெவின்ஸ்கியுடன் அதிபர் கிளின்ரனுக்கு ஏற்பட்ட உறவால் அவரது பதவி ஆட்டம் காணும் நிலை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பைசாநகரத்து சாய்ந்த கோபுரம் காப்பாற்றப்பட்டது

ரோம்,செப்.11

உலக அதிசயங்களில் ஒன்றான இத்தாலியின் பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் மேலும் சரிந்து தகர்ந்து விழுவது தடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கட்டடவியல் நிபுணரான ஜோன்பர்லாண்ட் இதனைத் தெரிவித்துள்ளார். (ஒ-8)

உலக அரங்கில்

## நியூசிலாந்தில் பாம்புகள் இல்லை என்ற கருத்து பொய்யாகும் நிலை!

வெலிங்டன்,செப்.11

பாம்புகள் இல்லாத நாடாகக் கருதப்பட்டு வந்த நியூசிலாந்தில் சமீப காலமாக அந்தக் கருத்தில் சந்தேகம் ஏற்படத் தொடங்கியுள்ளது.

வெலிங்டன் துறைமுகப் பகுதியில் அடிக்கடி பாம்புகள் கண்டுபிடிக்கப்படுவதனாலேயே இந்த சந்தேகம் எழுந்துள்ளது.

ஒரு கப்பலில் வந்த சரக்குப் பெட்டகம் ஒன்றில் கார் பற்றரிகளுக்கிடையே நச்சுப்பாம்பு ஒன்று சுருண்டு படுத்திருந்தது சமீபத்தில் தெரியவந்தது.

இது ஆஸ்திரேலியப் பகுதியில் காணப்படும் கொடிய விஷமுள்ள பாம்பாகும்.

ஏற்கனவே வெலிங்டன் துறைமுகப் பகுதியில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 3 பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனை அடுத்து -

சரக்குப் பெட்டகங்களை தீவிரமாகச் சோதனை போடவேண்டும் என்றும் -

பாம்புகளுடன் பெட்டகங்களை அனுப்பும் ஏற்றுமதியாளர்களுடன் வர்த்தக உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்றும் -

நியூசிலாந்து வனப்பாதுகாப்புச் சங்க தலைவர் கெவின் ஸ்மித் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாம்புகளால் அரிய பறவை இனங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## பேரழிவு ஆயுதம் வைத்திருக்க இந்தியாவுக்கு உரிமை உண்டு!

### அமெரிக்காவில் வாஜ்பாய் வலியுறுத்தல்!!

பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கும் உரிமை இந்தியாவுக்கு உண்டு என்று பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்தியுள்ளார்.

நியூயோர்க்கில் இந்திய அமைப்பு ஒன்று வாஜ்பாயின் அமெரிக்க வருகைக்காக ஏற்பாடு செய்திருந்த வரவேற்புக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும வாஜ்பாய தமதுரையில்-

உலகில் அணுஆயுதங்கள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்று கடந்த 50 வருடங்களாக இந்தியா வலியுறுத்தி வருவதாகவும் -

அதேசமயம் அத்தகைய நிலை ஏற்படும்வரை குறைந்தபட்ச அணு ஆயுதங்களை வைத்திருக்கும் இந்தியாவின் உரிமை நிலை நாட்டப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

முன்னதாக வாஜ்பாய் ஐ.நா. உச்சி மாநாட்டில் கலந்து காண்டு உரையாற்றினார். அப்போது அவர்,

உள்நாட்டில் ஜனநாயகத்தை நசுக்கிவிட்டு, ஐ.நா.மாநாட்டு மேடையில் சுதந்திரம் பற்றி பாகிஸ்தானின் ராணுவ ஆட்சியாளர் விளக்கம் அளிக்கிறார். இதிலிருந்து பாகிஸ்தானின் உண்மையான முகத்தை உலக நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும் - என்று தெரிவித்தார்.(ஒ)



## வெடிப்பொருள்கள் வெடித்து சீனாவில் 100 பேர் மரணம்!

சீனாவில் வாகனம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட வெடிப்பொருள்கள் வெடித்ததில் 100பேர் கொல்லப்பட்டனர்.

சீனாவின் மேற்குப் பகுதி நகரான உரின்ஸியில் ஒரு லொறியில் எடுத்துச்செல்லப்பட்ட வெடிப்பொருள்கள் சன நடமாட்டம் அதிகமிருந்த இடம ஒன்றில் வெடித்துச் சிதறியதாலேயே இந்தக் கோரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நீண்ட நாளாக சேமித்து வைக்கப்பட்டிருந்த வெடிப்பொருள்கள் தரமிழந்ததாகக் கருதி அவற்றை அழிப்பதற்காகக் குறைந்தளவு பாதுகாப்புடன் எடுத்துச்சென்றதே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (ஒ-8)

## ஐரோப்பிய யூனியனின் அழுத்தத்தால் எண்ணெய்வள நாடுகள் அவசரகூட்டம்!

வியன்னா,செப்.11

எண்ணெய்வள நாடுகளின் கூட்டமைப்பான 'ஒபெக்'கின் அவசர கூட்டம் நேற்று வியன்னாவில் கூடியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் எண்ணெய் விலையைக் குறைப்பதற்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கொடுத்துவரும் அழுத்தங்கள் குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட உள்ளதாகவும் -

எண்ணெய் விலையைக் குறைப்பதற்காக உற்பத்தியை அதிகரிக்கும் யோசனை குறித்து ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

எண்ணெய் விலை உயர்வு குறித்து நேற்றுமுன்தினம் 'ஐரோப்பிய யூனியன்' நாடுகளின் நிதி அமைச்சர்கள் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தின் எதிரொலியாகவே 'ஒபெக்' கூட்டம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெரும் போராட்டங்கள் இடம்பெற்று வருவதால் அந்த நாடுகளின் அரசுகள் தீவிர நெருக்கடியை சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)


கல்வியிலும் தொழிற்துறையிலும் புது ஒளி பாய்ந்திட
கிராமந்தோறும் மின்சாரம் எனும் எமது திட்டம் செயற்பட
வன்னியின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் தன்னிறைவு பெற்றது போல்
மின்சாரத்துறை இங்கும் அபிவிருத்தி கண்டிட
எம்மை ஆதரித்திடுவீர்!

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட் + ஈரோஸ்)

X

(C/12863)

# நீங்காத நினைவில் ஈராண்டின் நினைவலைகள்



பலர்வு: 19 — 02 — 1976

உதிர்வு: 11 — 09 — 1998

## அமரர் புஸ்பநாதன் நமணன்

ஆண்டுகள் இரண்டாகியும்
ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் மாறலாம்
காட்சிகள் மாறலாம் நமணா
ஆனால் உன் அன்பு முகம் என்றும் மாறாது!

இன்றும் நினைவு கூரும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள், உற்றார். உறவினர்.

உரும்பிராய் வடக்கு,
இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய். (78113)

# வீதிகளில் கூட்டங்கள் நடத்த தடை

கொழும்பு, செப். 11

தேர்தல் பிரசாரக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் பிரதான நகரங்களிலும் பிரதான வீதிகளிலும் நடத்துவதைத் தடை செய்ய பொலீஸார் நடவடிக்கை எடுக்க உள்ளனர்.

இந்தத் தடை உத்தரவு தொடர்பான அறிவித்தல் அந்தந்தப் பிரதேச பொலீஸ் மா அதிபர்களுக்கு விடுக்கப் பட்டுள்ளதாக தேர்தலுக்குப் பொறுப்பான பிரதி பொலீஸ் மா அதிபர் ஏ. ஏ. அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறவுள்ள தேர்தல் பிரசாரங்களை இலக்காகக் கொண்டு தாக்குதல் தொடுக்க புலிகள் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே பொலீஸார் இந்த முடிவை எடுத்துள்ளார்கள். அத்துடன் புலிகள் தொடுக்கும் எவ்வகையான தாக்குதல்களையும் தடுக்கும் பொருட்டு விசேட பொலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மருந்தாளருக்கு உள்ளகப் பயிற்சி

மருந்தாளர்களுக்கான பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியவர்களில் ஆறு பேர் யாழ். போதனாவைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இந்த ஆறு பேரும் கடந்த வாரம் முதல் இங்கு தமது பயிற்சியினை ஆரம்பித்தனர்.

ஒருவருட உள்ளகப் பயிற்சியின் பின் இவர்கள் வெற்றிடமுள்ள இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர். (ஐ-15)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 05 — 1940

மறைவு: 11 — 09 — 1997

## நாகலிங்கம் சுப்பிரமணியம்

எம் இனிய அப்பாவே!
எம்மீது பாசமழை பொழிந்து பாரினிலே
எம்மை நல்நிலைக்கு உயர்த்திய அன்புத்தந்தையே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

- குடும்பத்தினர்

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. (சி/12890)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சா. பத்மநாதன்**
(நிர்வாக உத்தியோகத்தர்)
தோற்றம் 01-11-1940 மறைவு 11-09-1998



அமரர்
**பொன். சிவபாலன்**
(யாழ். மாநகர முதல்வர்)
தோற்றம் 28-03-1952 மறைவு 11-09-1998



அமரர்
**மா. ஈஸ்வரம்**
(மராமத்துப் பொறியியலாளர்)
தோற்றம் 13-12-1931 மறைவு 11-09-1998



திருமதி
**மல்லிகா இராசரத்தினம்**
(கட்டடக் கலைஞர்)
தோற்றம் 16-09-1947 மறைவு 11-09-1998



அமரர்
**பொ. பத்மராஜா**
(ஆங்கிலத் தட்டெழுத்தாளர்)
தோற்றம் 09-03-1936 மறைவு 11-09-1998

அகாலமாக எங்களைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டானாலும்
எங்கள் இதயத்தில் நீங்கள் என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்கள்.

யாழ். மாநகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கம் சார்பில்
மாநகர ஆணையாளர், திணைக்களத் தலைவர்கள், பணியாளர்கள்.

(சி/12883)

உதயன்

## மோசடிகளில் பெரும் மோசடி!

நியாயமான, நீதியான, நேர்மையான தேர்தல் நடைபெற வேண்டும் என்று பல தரப்புகளும் வற்புறுத்தி வருகின்றன. தேர்தல் வன்செயல்கள் முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக, அது குறித்து அறிவிக்கப்பட்ட பின்னரும், அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் பெரிய அளவில் வேலைவாய்ப்பு வழங்கப்படுவது குறித்து மனச்சாட்சி உள்ளவர்கள் இப்போது விசனம் தெரிவிக்கிறார்கள்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர், மக்கள் வாக்குகளை நாடி அரசாங்கம் வேலைவாய்ப்புக்களை மற்றும் சலுகைகளை அள்ளி அள்ளிக் கொடுப்பது இந்த நாட்டின் எழுதப்படாத விதியாகவே - வழமையாகவே - இருந்து வருகிறது. அது பெரும் அரசியல், தேர்தல் மோசடி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மக்களின் வளங்களை அரசியல்வாதிகள் தமது வாக்கு நலனுக்காகச் சூறையாடுவதுமாகும்.

தேர்தல் வரப்போகிறது என்று அறிந்ததும் - தேர்தல் காலம் நெருங்கியதும் - வேலைவாய்ப்பு வழங்குவது, அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது, தமக்குத் தேவையானோருக்கு பதவி உயர்வுகள் வழங்குவது, இடமாற்றங்கள் செய்வது இந்த நாட்டில் நீண்டகாலமாக நடைபெறும் மோசடியாகும்.

மக்களின் வாக்குகளை பெறும் நோக்குடன் தேர்தலை நாடி வேலை வாய்ப்பு வழங்குவதும் ஏனைய சலுகைகளைச் செய்வதும் கைலஞ்சம் வாங்குவதற்கு ஒப்பானதாகும் - சமமானதாகும். குருக்கள் செய்தால் குற்றம் இல்லை என்ற தோரணையில் தேர்தல் நெருங்கும் காலத்தில் ஆட்சியில் உள்ளவர்கள் செய்யும் குற்றம் குறித்து எவரும் கவனத்தில் எடுப்பதில்லை.

பதவிகளையும் அவற்றுக்குள்ள அதிகாரங்களையும் துஷ்பிரயோகம் செய்து அரசியல் ஆதாயம் தேடுவது கண்டும் காணப்படாத விவகாரமாக மறைந்து போகிறது. தாம் ஆட்சியில் இருந்தபோது இதே குற்றத்தையும் துஷ்பிரயோகத்தையும் செய்ததால் - தங்கள் கையும் கறை படிந்தது என்பதால் - எதிர்க்கட்சிகளும் தேர்தல் நெருங்கும் காலத்தில் அரசு செய்யும் இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்பதில்லை.

அது ஒரு புறமிருக்க-

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரும் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னரும் வேலை வாய்ப்புக்கள், சம்பள உயர்வுகள் போன்ற சலுகைகளை ஆட்சியில் இருந்தவர்கள் செய்கிறார்கள், தட்டிக்கேட்க எவருமில்லை என்ற துணிச்சலுடன் செயற்படுகிறார்கள் அவர்கள்.

துறைமுக அதிகாரசபை, கூட்டுறவு மொத்த ஸ்தாபனம், பெற்றோலியம் கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களில் பொதுத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரும் பெரிய அளவில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தனைக்கும் இந்த நிறுவனங்கள் சிலவற்றில் பல வருடங்களாக அமைய அடிப்படையில் பணிபுரியும் ஆயிரக் கணக்கானோர் நிரந்தரமாக்கப்படவில்லை. இப்போது வாக்குகளை எதிர்பார்த்தே புதிய நியமனங்கள் செய்யப்படுகின்றன என்பதில் எள்ளளவு சந்தேகமும் இருக்க முடியாது. இது மறைக்க முடியாத, மறுக்க முடியாத தேர்தல் குற்றம்.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் அரசாங்க அதிகாரிகளை இடமாற்றம் செய்வது கூட தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இங்கு...? முன்னாள் எம்.பிக்கள் தங்கள் கையாள்களுக்குச் செய்யக் கூடிய நலன்களையும் சலுகைகளையும் கூச்சம் இன்றிச் செய்கிறார்கள் - நூறு வீதம் சுயநலத்துடன்! வாக்கு வாங்குவதற்காக!

இவ்வாறு செய்வதனை தேர்தல் சட்டத்தின் கீழ் கடும் தண்டனைக்குரிய குற்றம் ஆக்க வேண்டும். சுவரொட்டி ஒட்டுவது, பதாகைகள் கட்டுவது போன்றவற்றை தேர்தல் சட்டத்தின் கீழ் குற்றச்செயல்களாக்க முடியுமெனில், தேர்தல் கால அரச நியமனங்களை ஏன் குற்றமாக்க முடியாது? இதுவரைகாலமும் இதனைச் செய்யாமல் தவிர்த்து வருவது அரசியல்வாதிகளின் மோசடிகளில் பெரும் மோசடி!

### "அரசமைப்பை நாய்களுக்குக் காட்டத் தேவையில்லை"

# அமைச்சர் திஸநாயக்காவின் கூற்றுக்கு எதிராக மகாசங்கம் போர்க் கொடி!

## சத்தியாக்கிரகத்துக்கு ஏற்பாடு

கொழும்பு,செப்.11

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்காவிற்கு எதிராக சத்தியாக்கிரகம் ஒன்றை மேற்கொள்ள மகாசங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

புதிய அரசமைப்புச்சட்டத்தை தமக்குக் காட்டவில்லை என்று மகாசங்கத்தினர் கேட்டதற்கு அமைச்சர் கூறிய கூற்று மகாசங்கத்தினரையும், பௌத்த மதத்தையும் அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அதற்காக அமைச்சர் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் கோரியே இந்தச் சத்தியாக்கிரகத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"அரசமைப்பை நாய்களுக்கும், தறுதலைகளுக்கும் காட்டத்தேவையில்லை" என்று அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா கூறிய கூற்றே மகா சங்கத்தினரைச் சீற்றமுற வைத்துள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.

அமைச்சரின் தொகுதியான ஹங்குராங் கெத்தயில் இந்தச் சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ள தேசிய சங்க சபையும், தாயகத்தைக்காக்கும் அமைப்பும் ஏற்பாடு செய்துள்ளன.

அரசமைப்புத்திட்டத்தை நாய்களுக்கும் தறுதலைகளுக்கும் காட்டத் தேவையில்லை என்று அமைச்சர் கூறிய கூற்றும் பெல்லன் வில விமலரத்ன தேரோவிற்கு அரசமைப்புத் திட்டத்தை வாசித்து விளங்கிக் கொள்ள முடியவில்லை என்ற கூற்றும் வணக்கத்திற்குரிய மகாசங்கத்தினர்களை அவமதித்துள்ளதாக மகாசங்கத்தினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அமைச்சர் தம்மிடம் பொது மன்னிப்புக் கேட்கக் கோரி சத்தியாக்கிரகம் இருக்கும் தீர்மானத்தையும் தமது கூட்டமொன்றில் அவர்கள் நிறை வேற்றியுள்ளனர்.

இந்தத் தீர்மான நிறைவேற்றக் கூட்டத்திற்கு அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்த ரக்பிததேரோ மற்றும் அமரபுர மகாசங்கத் தலைவர் மடிகே பஞ்ஞாசீஹ தேரோ ஆகியோர் தலைமை வகித்துள்ளனர். (ஐ-6)

### கூட்டணி நியமனத்தில் குளறுபடி

## தமிழர் மகாசபை இன்று மனுத்தாக்கல்

கொழும்பு,செப்.11

திகாமடுல்ல மாவட்டத் தமிழர் விடுதலைக் கூட்டணி நியமனப் பத்திரங்களில் குளறுபடிகள் இடம் பெற்றுள்ளதனால் அதனைத் தெரிவத்தாட்சி அலுவலர் ஏற்றுக்கொண்டமை சட்டவிரோதமானது எனவும் அதனை நீதிமன்றம் நிராகரிக்க வேண்டுமெனவும் கோரி தமிழர் மகாசபை இன்று திங்கட்கிழமை மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

திகாமடுல்ல மாவட்ட நியமனப் பத்திரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகத்தின் கையெழுத்து உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், எனவே அதனை நிராகரிக்குமாறும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்த பின்னர் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட போதும் தெரிவத்தாட்சி அலுவலர் அதனைப் பொருட்படுத்தவில்லை எனவும் மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

### கிரனேட் வீசிய கான்ஸ்டபிள் தற்கொலை

வவுனியா,செப்.11

மன்னார் முருங்கன் பகுதியில் உள்ள படை முகாம் ஒன்றில் கடந்த வெள்ளியன்று இரவு 8 மணியளவில் பொலீஸாருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது கிரனேட் வீசிய கான்ஸ்டபிள் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இந்தக் கிரனேட் வீச்சில் காயமடைந்த இரு பொலீஸார் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3-5-8)



அரியாலை முள்ளி வீதியில் வீடு ஒன்றிலிருந்து கடந்த திங்கட்கிழமை படையினரால் அழைத்து வரப்பட்ட வயோதிபத் தம்பதியர்களான பொன்னர் கபிரியல்பிள்ளை (வயது 77), நல்லம்மா கபிரியல் பிள்ளை (வயது 73) ஆகியோரையே படத்தில் காண்கிறீர்கள். கடந்த மே 10ஆம் திகதி இரவு மோதல் வெடித்த போது தமது பகுதியிலிருந்து ஒரு சிலரைத் தவிர எல்லோரும் வெளியேறியிருந்தனர் என்றும், பொது மக்கள் வெளியேறியது குறித்து அடுத்தநாள் காலையிலேயே தமக்குத் தெரியவந்தது என்றும் அதன் பின்னர் வெளியேற முடியாத நிலையில் தாம் அங்கேயே தங்கியிருந்ததாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 115 நாள்களாக தாம் முள்ளியில் தங்கியிருந்ததாகவும் அந்த நாள்களில் தாம் ஒரு நாளாவது நிம்மதியாக உறங்கியது கிடையாது என்றும் தாக்குதல்களின் போது தாம் வீட்டுக்குள்ளேயே பதுங்கியிருந்ததாகவும் இவர்கள் தெரிவித்தனர். நல்லூர் அரசடி வீதியில் இவர்கள் தற்போது தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## தகவல்துறை அமைச்சர் பதவி அடுத்த தடவையும் மங்களவுக்கே?

### ஜனாதிபதி சூசகமாகத் தெரிவிப்பு

கொழும்பு,செப்.11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் பதவி தொடர்ந்தும் மங்கள சமரவீரவுக்கே வழங்கப்படும் என்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் அலரி மாளிகையில் செய்தியாளர்களை ஜனாதிபதி சந்தித்து உரையாடினார். அங்கு உரையாற்றுகையில் "எமது கணிப்பீடுகளின்படி நாமே மீண்டும் ஆட்சியை அமைக்கப் போகிறோம். நீங்கள் இன்றைய தகவல்துறை அமைச்சருடனேயே தொடர்ந்தும் பணிகளை மேற்கொள்ளலாம்" என்றுசெய்தியாளர்களைப் பார்த்து ஜனாதிபதி கூறினார். அப்போது குறுக்கிட்ட அமைச்சர் மங்கள சமரவீர "வேண்டாம் எனக்கு வேறு அமைச்சு ஒன்றைத் தந்து விடுங்கள்" என்று ஜனாதிபதியைப் பார்த்துக் கூறினாராம்.

'சண்டே ஐலண்ட்' பத்திரிகை இத் தகவலை வெளியிட்டிருக்கிறது. (ஐ-20)

## விமானங்களின் பேரிரைச்சலால் மக்கள் பெருமளவில் பாதிப்பு

### படைத்தரப்பிடம் கூட்டணி ஆட்சேபம்

'மிக்' விமானங்கள் யாழ்நகரில் தாழப் பறப்பதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்றும் இதனைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணிக்குமாறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி யாழ்.மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜயேந்திராவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விமானங்கள் தாழப் பறப்பதனால் ஏற்படும் பேரிரைச்சலினால் யாழ். ஆஸ்பத்திரி நோயாளர்கள் மற்றும் குழந்தைகள், இருதய நோயாளர்கள், வயோதிபர்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதாகவும் இவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

### கடற்படைக்கு புதிய படகு கையளிப்பு

கொழும்பு 'டொக் யார்ட்' நிறுவனத்தால் கட்டப்பட்ட புதிய அதிவேகத் தாக்குதல் படகு ஒன்றை நேற்று முன்தினம் கடற்படை பொறுப்பேற்றது.

படகை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் வைபவம் கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்றது. கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் திசேரா விட்டப்டகின் சாவியை 'டொக் யார்ட்' நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சரத் ஒபயசேகர கையளித்தார். மேலும் ஐந்து படகுகள் அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் கையளிக்கப்படும் என்று அவர் அங்கு தெரிவித்தார். (ஐ-20)

**உதயவாக்கு**

**பிறரை மாய்க்க எண்ணுபவன் தன்னையே அழித்துக் கொள்வான். இதுவே இயற்கையின் நியதி.**

*- காந்தியடிகள்*

## சாவகச்சேரிக்கு ஒதுக்கிய நிதி நிறுத்தப்பட்டதற்கு ஆட்சேபம்!

### பிரதேச சபைத் தலைவர் கடிதம்

யாழ்ப்பாணம்,செப்.11

வடக்கில் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் சாவகச்சேரி பிரதேசசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரத்துச் செய்யப்பட்டசெய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா வடக்கில் மீள்குடியமர்வு புனர் வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில தென்மராட்சிப் பிரதேசமும் பரந்துபட்ட பெருமளவு மக்கள் வாழும் பெரிய பிரதேசமாகும். அண்மைக் காலத்தில் தென்மராட்சி கிழக்கு மற்றும் சாவகச்சேரிநகரம் ஆகிய இடங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து இருந்தாலும் கூட அல்லாரை, கச்சாய், கொடிகாமம், கெற்பெலி, விடத்தற்பளை, உசன், மிருசுவில் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி வரணி, வடமராட்சி எல்லைவரை தென்மராட்சி பிரதேச மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எமது சாவகச்சேரி பிரதேச சபைக்கும் முப்பதுலட்சம் ரூபா மேற்படி ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்பட்டிருப்பதாக அறிவித்து நாம் அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துவரும் நிலையில் குறித்த நிதி சாவகச்சேரி பிரதேசசபைக்கு ஒதுக்கப்படாது ரத்துச் செய்யப்பட்டது. இந்த நடவடிக்கை மக்கள் எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்கும் நிலையில் அரசியல் ரீதியான ஒரு செயற்பாடு என்றே நாம் கருத வேண்டியிருக்கின்றது.

எமது பிரதேசத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை எமது அனுமதியின்றி மாற்றுவது எமக்குள்ள அதிகாரங்களைப் பறிப்பது போன்ற செயலாகும். ஆகவே இது சம்பந்தமாக எனக்கு உடன் அறியத்தருமாறும் அப்பொழுதுதான் காலம் தாழ்த்தாது இது சம்பந்தமான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதை அறியத் தருகிறேன்.

இப்படி அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-ரி)

**நாளை**

**ஆவணி 27**

**செவ்வாய்க்கிழமை**

*திதி:* சதுர்த்தசி பின் இரவு 12.27 வரை.

*நட்சத்திரம்:* அவிட்டம் முற்பகல் 10.09 வரை.

நடேசர் அபிஷேகம்

*சுபநேரம்:* 10.33 - 12.03

*ராகுகாலம்:* 3.03 - 04.33

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

அங்கிகளில் பலவகைகள் உண்டல்லவா? ஆத்திரப்பொட்டுக்களிலும் அதே கதைதான். மேலும் சிலவற்றைப் பார்ப்போம்.

# கொலைகாரப் பூச்

## போர் வீரர்கள் புறப்பட்டுவிட்டார்கள்

எறும்புகள், தேனீக்கள், குளவிகளின் இனத்தவர்கள் ஆகும். இவற்றின் உடல்நீளம் இரண்டிலிருந்து இருபத்தியைந்து (2-25)மில்லி மீற்றர்வரை வியாபித்திருக்கும். எறும்புகளில் கிட்டத்தட்ட பத்தாயிரம்(10,000) இனங்களுண்டு. தமிழிலேயே நம்முன்னோர்கள் நுள்ளான், துருதுருத்தான், பிணநுள்ளான், கடியெறும்பு, பனங்கட்டியெறும்பு, மரஎறும்பு என்றெல்லாம் வகைப்படுத்தி உள்ளார்கள் அல்லவா. பல இனங்களின் எறும்புப் பெண்களால் கடிக்கவும் கொட்டவும் முடியும். எறும்புகளில் உள்ள நஞ்சு போமிக் கமிலம்(FORMIC ACID) ஆகும். சிலவகை மர எறும்புகளால் எதிரியின் மேல் 20-30 சென்ரிமீற்றர் தூரத்திற்கு போமிக்கமிலத்தைப் பீய்ச்சியடிக்க முடியும். எறும்புகளில் தொழிற்பிரிவு உண்டு. போராளி எறும்புகள்(SOLDIERS) கூட்டைக்காப்பதுடன், தொழிலாளிகள் வரிசையாகச் செல்லும் போது இருமருங்கிலுமிருந்து அவற்றை நெறிப்படுத்தும், தறிகெட்டுச்செல்பவை தண்டிக்கப்படும், மேலும் தம்மினத்தைச் சார்ந்த பிறிதொரு எறும்புக்கூட்டத்துடன் போருக்குச் செல்லும் போது வரிசையாகப் படையெடுத்துச் செல்லும்; இரு பக்கத்திலும் அழிவு ஏற்படும்(எறும்புச் செய்தித் தணிக்கை செய்யப்படுவதில்லை), போர் தொடுத்துச் சென்ற கூட்டம் வெற்றி பெற்றால் பல தொழிலாளர்களையும் முட்டைகளையும் கவர்ந்து வருவதுண்டு; தொழிலாளர்கள் அடிமைகளாக வேலை வாங்கப்படும்; முட்டைகள் பொரிக்கப்பட்டுக் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு அவையும் அடிமைத் தொழிலில் ஈடுபடுத்தப்படும். எறும்புகள் 'கெரிலாப் போரிலும்' ஈடுபடுவதுண்டு. அதாவது மறைந்திருந்து திடீரென்று தாக்கி, அகப்பட்டதையெல்லாம் கவர்ந்து வருவதுண்டு. அனேக எறும்பினங்கள் ஏபிட்டுக்களை வளர்ப்பதுண்டு, மேய்ப்பதுண்டு. அதனால் ஏபிட்டுக்கள் 'எறும்புப் பசுக்கள்' (ANT COWS) எனவும் அழைக்கப்படும். சில இன எறும்புகள் காளான்களைப் பயிர் செய்வதுண்டு.

## போர் வீரர் வாழ்க்கை

எறும்புகள் பெரிய கூடுகளில் (NESTS) வாழும், ஒரு ராணியினால் ஆட்சி செய்யப்படும். ஒவ்வொரு எறும்பும் செய்வதற்கு அதற்கென்று தொழில் உண்டு. பெண் தொழிலாளர்கள் உணவைக்கொண்டு முற்பக்கமும் பிற்பக்கமுமாக ஓடித்திரியும். சில இனங்களில் போர் வீரர்களும் உண்டு. அளவில் பெரிய பெண்கள் போர் வீரர்களாக கூட்டுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும். இவை மிகவும் எதிர்க்கும் தன்மையுள்ளவை. வேறு ஒரு கூட்டுக்குரிய எறும்பு அலாதுபட்டு வந்தால், அதன் மணத்தைக் கொண்டு அது இனங்காணப்பட்டு உடனேயே கொல்லப்பட்டு விடும். முடிவில்லாப் போர்க்காலத்தில் ஒரு படை வீட்டில் (ARMY BARRARS) உள்ள வாழ்க்கையைப் போன்றது எறும்புக் கூட்டில் உள்ள சாதாரண வாழ்க்கை. எறும்புகள் எப்பொழுதும் 'தாக்குதல் நிலையங்களில்' (ACTION STATIONS) தயார் நிலையில் இருக்கும்.

## கொல்லும் விடம்

எறும்புகளிலேயே மிகப்பயங்கரமானது ஆஸ்திரேலியாவுக்குரிய கறுப்பு எருத்துநாய் எறும்பு( BLACK BULLDOG ANT). இது கொட்டவும் கடிக்கவும் செய்யும், இதன் விடம் ஒரு மனிதனை பதினைந்து(15) நிமிடங்களுக்குள் கொல்லும் திறனுடையது என்று அறியப்பட்டுள்ளது.( ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்தோர் கவனிக்க வேண்டிய விடயம்)

## இறப்பு வரிசைகள்

ஆபிரிக்கப் போர்வீரர் எறும்புகள் (ARMY ANTS) படைப்பகுதிகளாக (COLUMNS) நீண்ட வரிசைகளில் அணிவகுத்துச் செல்லும், ஒவ்வொரு கூட்டத்திலும் ஆயிரக்கணக்கில் எறும்புகள் இருக்கும் இதே போல, தென் அமெரிக்காவில் ஓட்டுநர் எறும்புகள் (DRIVER ANTS) அணிவகுத்துச் செல்லும். இவை செல்வது பயங்கரக் காட்சியாக இருக்கும், காரணம் இவை செல்லும் பாதையில் இருக்கும் உயிருள்ள, இறந்த அனைத்தையும் உணவாகக் கொள்ளும், எறும்புகள் ஆயிரக்கணக்கில் இருப்பதனால் விரைவில் இடம் சுத்தம் செய்யப்பட்டுவிடும். மனிதர்களால் தப்பித்துக் கொள்ள முடியும், காரணம் இவை நெருங்கும் போது ஒரு வகை ஒலி எழும், அதைக்கேட்டதுமே பிரதேசத்திலுள்ள மக்கள் கையில் அகப்பட்டதைக் கொண்டு ஓடித்தப்பி விடுவார்கள், தவறுதலாகக் கைவிடப்பட்ட குழந்தைகள் , நடமாடமுடியாத நோயாளிகள், கட்டுக் கொடியில் உள்ள வளர்ப்பு விலங்குகள், கூடுகளில் உள்ள கோழிகள் போன்றவை எல்லாம் காலி செய்யப்பட்டு விடும். ஆயினும் இவற்றினால் ஒரு நன்மையும் உண்டு, குடிசைகளில் உள்ள பீடைகள் எல்லாம் காலி செய்யப்படும். இவை ஓரிடத்தில் நிலைத்து நிற்பதில்லை, அசைந்து கொண்டே இருக்கும் (ON THE MOVE) இவற்றின் ஒலி கேட்டதும் வன விலங்குகள் கூடத் தலைதெறிக்க நாலாபக்கமும் ஓடித்தப்பித்துக்கொள்ள முயற்சிக்கும். இவற்றின் நகர்வை மனிதனாலும் கட்டுப்படுத்த முடியாது. பாம்புகளும் பெரும்பாலும் இவற்றின் தாக்குதலுக்கு ஆளாவதுண்டு (செவிடுகளாக இருப் பதனால்) இந்த எறும்புகள் அளவிலும் பெரியவை, மிக உறுதியான சிபுகங்களை (தாடைகளை) உடையவை.

## அழிக்கும் குழுக்கள் (DEMOLITION SQVADS)

கறையான்கள் பார்ப்பதற்கு எறும்புகளைப் போல இருந்தாலும் எறும்புகளுக்கு இனத்தவர்கள் அல்ல. எறும்பைப் போலவே இவையும் வாழ்க்கை நடத்தும், ஒரு இராசாவாலும் இராணியாலும் ஆளப்படும். போர் வீரர்கள் எனப்படும் பெரிய தொழிலாளர்கள் கூட்டிற்குப் பாதுகாப்பைக் கொடுக்கும். கூடு (NEST) நிலத்துக்குக் கீழே இருக்கலாம் அல்லது கூம்பு வடிவத்தில் உயரமாக எழுப்பப்படலாம். கறையான்கள் மாமிசத்தை உண்பதில்லை. ஆயினும் இவை தாவரங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு. மேலும் இவை மரத்தை உணவாகக் கொள்வதனால் மனிதனுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு; நிலைகள், கதவுகள், தளபாடங்கள், மரத்தூண்கள் போன்றவற்றையெல்லாம் அரித்துப்பாழாக்கிவிடும். செலுலோசைச் சமிப்பதற்கு இவற்றில் நொதியங்கள் இல்லை. ஆயினும் இவற்றின் குடலில் ஒன்றிய வாழ்க்கை நடத்தும் திறைக்கோடெஸ்மா (TRI CHODESMA) என்ற புரற்ற சோவன் செலுலோசு சமிபாட்டுக்கு உதவும். அத்துடன் கறையான்களின் உடலிலுள்ள சில அமிலங்கள் கண்ணாடி,ஈயம் மற்றும் உலோகங்களையும் அழிக்கும் இயல்புடையது. கறையான்கள் முழுக்கட்டடங்களை ஆக்கிரமித்து ஈற்றில் அவை நொருங்கிவிழக் காரணமாக அமைவதுண்டு.

## சோர்வடையாத அலகுகள்

பூச்சிகளிலேயே பெரிய கூட்டம் வண்டுகள் ஆகும், 25000 இனங்களுக்குமேலே உண்டு. வண்டுகள் பேராசையுள்ள உணவு கொள்பவையாகும், சக்தியுள்ள அலகுகளை உடையவை, சில இனங்கள் தாவரங்களை உணவாகக் கொள்ளும். சில மாமிசத்தை உணவாகக் கொள்ளும், அநேகமான வண்டுகள் பயங்கரமான வேட்டைக்காரர். சில நீர் வண்டுகள் தங்களைக்காட்டிலும் பல மடங்கு பெரிய மீன்களைத் தாக்கி உணவாகக் கொள்வதுண்டு. பல வண்டினங்கள் இறந்த விலங்குகளையோ அல்லது பிற பூச்சிகளையோ உணவாகக் கொள்ளும். மனிதர்கள் நேரடியாக வண்டுகளினால் தாக்கப்படுவதில்லை, ஆயினும் மற்றும் பல வழிகளினால் பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு.

## உருளைக்கிழங்கு உண்ணிகள்

பல வண்டினங்கள் காடுகளையும் பயிர்த் தாவரங்களையும் தாக்கிப் பெருமளவில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதுண்டு. இத்தகைய வண்டினங்களில் ஒன்றுதான் கொலறாடோ வண்டு (COLORADO BEETLE) இது ஒரு சென்ரிமீற்றர் வரை நீளமுள்ளது, நெடுக்காகக் கறுப்பு வெள்ளைப்பட்டிகளை உடையது. குடம்பிகளும், நிறைவுடலிகளும் பயிர்களைத் தாக்கி அழிவை ஏற்படுத்தும். சிறப்பாக உருளைக்கிழங்குத் தாவரத்தை.

## நச்சு வண்டுகள்

சில இன வண்டுகளின் உடல் கன்தாறிடின் (CANTHARIDIN) என்ற நஞ்சைக் கொண்டிருக்கும். இது மனிதத் தோலில் எரிச்சலையும் கொப்புளங்களையும் தோற்றுவிப்பதுடன்,அதிக வலியையும் ஏற்படுத்தும். கொப்புள வண்டுகள் (BLISTER BEETLES) பிரகாசமான நிறங்களை உடையவை; அளவில்3-20 மி.மீ. வரை மாறுபடும் (இவ்வகை வண்டுகள் இங்கும் உண்டு), கறுப்பு உடலில் சிவப்புப் புள்ளிகளை உடையதாக, நீள்வளைய வடிவமுள்ளதாக, 8-10 மி.மீ நீளமுடையதாக, பொதுவாகப் புல், பூண்டுகள், செடிகளில் காணப்படும்) தாக்கப்படும் போது அநேகமான கொப்புளவண்டுகள் மிகவும் துர்நாற்றமுள்ள ஒரு திரவத்தை வெளிவிடும். கால்களின் மூட்டுக்களுக்கிடையே இத்திரவம் வெளிவரும். மனிதத் தோலுடன் தொடர்புகொள்ளும் போது இத்திரவம் சிவப்பு நிறத்தையும் கொப்புளங்களையும் தோற்றுவிக்கும். நூறு வருடங்களுக்கு முன் பல நோய்களைக் குணப்படுத்த வைத்தியர்கள் இத்திரவத்தைப் பயன்படுத்தினார்கள். ஆனாலும் இது நன்மையைக்காட்டிலும் கூடுதலான தீமைகளைத்தான் விளைவித்தது.

## அழிவாளிகள்

பூச்சி உலகத்தில் மிகவும் அழிவை ஏற்படுத்துவது ஆபிரிக்க வனாந்தர வெட்டுக்கிளி (AFFRICAN DESERT LOCUST) ஆகும். வெட்டுக்கிளிகள் அயனமண்டலப் பிரதேசங்களுக்குரிய பெரிய தத்துவெட்டியன்கள் (GRASS HOPPERS) ஆகும். எந்த வகையான தாவரத்தையும் இவை உணவாகக் கொள்ளும். அதனால் பெரிய அளவில் பயிரழிவை ஏற்படுத்தும். இவற்றின் தாக்கத்தினால் உணவுப்பஞ்சங்களும் ஏற்பட்டதுண்டு. இவை சில காலங்களில் கூட்டமாகக் குடிபெயர்ந்து தாக்கும். ஆபிரிக்கா, மத்தியகிழக்கு. இந்தியா. சீனா போன்ற நாடுகளில் தான் இவற்றின் தாக்கம் அதிகம் ஏற்படுவதுண்டு. இலங்கையில் ஓரளவு பாதிப்பை இவை ஏற்படுத்துவதுண்டு; பெரும்பாலும் நெல்வயல்களைத் தாக்குவதுண்டு.

## அழுக்கில் விருத்திசெய்பவை

ஈக்கள் அழுக்கில் முட்டையிடும்; உணவுப் பொருள்களின் மேலும் முட்டையிடும். குடம்பிகள் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும். ஈக்களின் குடம்பிகள் கீடங்கள் (MAGGOTS) என அழைக்கப்படும். ஈக்களினால் ஏற்படும் பாதகமான விளைவு அவை உணவை நக்கி உறிஞ்சுவதனால், உணவுப் பொருள்களில் தொற்றுதலை ஏற்படுத்தி மனிதனுக்குப் பல நோய்களை விளைவித்து விடுகின்றன. சில இன ஈக்கள் கால்நடைகளின் புண்களில் முட்டைகளை இட்டு வைக்கும். தோன்றும் கீடங்கள் சதையை அரித்து உண்டு புண்களைப் பெருகச் செய்யும்.

## குருதியை உறிஞ்சுபவை

பெண் நுளம்புகள் வளமான முட்டைகளை இட குருதியை ஒரு தடவையாவது உட்கொள்ளவேண்டும். பறவைகள், பாலூட்டிகள், மனிதன் போன்ற இளஞ்சூட்டுக் குருதிநிலையான அங்கிகளிலிருந்தே இவை குருதியை உறிஞ்சும். இவை குருதியை உறிஞ்சுவதனால் பெருமளவில் பாதிப்பு ஏற்படுவதில்லை. கொட்டிய இடத்தில் ஏற்பட்ட தொற்றுதலின் பயனாக, அப்பகுதியில் சிறிது வீக்கமும், நமைச்சலும் ஏற்படும். ஆனால் பெண் நுளம்புகள் ஏற்படுத்தும் பாதகமான விளைவுகள் சில கொடிய நோய்களைத் தொற்ற வைப்பதாகும். நுளம்பு நீர்நிலைகளில் முட்டையிடும்; நுளம்பின் விருத்திக்கு தேங்கும் நன்னீர் இருப்பது அவசியம். இதனாற்றான் கிராமங்களைக்காட்டிலும்பட்டினங்களில் நுளம்புத் தொல்லை அதிகமாக இருக்கும்.

## செற்சி ஈ (TSETSE FLY OF AFRICA)

செற்சி ஈ ஆபிரிக்காவிற்கு உரியது. குருதியை உணவாகக் கொள்ளும் வன விலங்குகளிடையே நோய்க்காவியாக அமையும். மனிதனில் தூக்க நோய் (SLEEPING SICKNESS) என்ற கொடிய நோயைப்பரப்பும். செற்சி ஈயில் ஆண் பெண் இரண்டும் குருதியை உணவாகக் கொள்ளும்(நமது நாட்டிலும் இரண்டு வகையான மாட்டிலையான்கள் இருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள், இதில் சிறியதைப் போன்றதே செற்சி ஈயும்)

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

## பேன்களும் மூட்டைப்பூச்சிகளும்

பேன்கள் பல வழிகளிலும் மனிதனில் வாழக்கற்றுக் கொண்டுவிட்டன . தலைப்பேன் (HEAD LICE) தனது கால்களிலுள்ள கொடுக்குகளினால் முடியைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு மண்டையிலிருந்து குருதியை உறிஞ்சிப் பெற்றுக்கொள்ளும். இது முட்டைகளை முடியில் ஒட்டி வைக்கும். இவை ஈர் (NITS) என அழைக்கப்படும். உடற்பேன் (BODY LICE) துணிகளில் இருந்து கொண்டு உடலைத் தாக்கும். ஒரு காலத்தில் தலைப்பேனும், உடற்பேனும் சர்வ சாதாரணம். இப்பொழுது வெகுவாகக் குறைந்து விட்டது. மனிதனின் உடற்சுகாதார மேம்பாடே இதற்குக் காரணம்.

மூட்டைப்பூச்சிகள் படுக்கைகள், தளபாடங்கள், சுவர்கள் போன்ற இடங்களில் மறைந்து வாழும். இரவில் படையெடுத்துத் தாக்கும். மனிதனின் உடல் வெப்பத்தை அறிந்தே இவை மனிதனைத் தாக்குகின்றன. வெடிப்புக்கள் மற்றும் மறைவிடங்களில் மூட்டைப் பூச்சிகள் முட்டைகளை இட்டு வைக்கும்.

## தெள்ளு - (FLEA)

பலதரப்பட்ட விலங்குகளிலும் தெள்ளு வாசம் செய்யும். இளஞ்சூட்டுக் குருதிநிலையான விலங்குகளிலேயே இவை தொற்றிக்கொள்ளும். ஆடு, மாடு, நாய், பூனை போன்ற வளர்ப்பு விலங்குகளிலிருந்து மனிதனில் தொற்றி, மனிதனையும் பதம் பார்ப்பதுண்டு. எலிகளில் வாழும் தெள்ளு மனிதனைக் கடிப்பதனால் தொற்றும் வியாதிதான் கொள்ளை நோய் (PLAGUE). ஒரு காலத்தில் உலகளாவிய ரீதியில் இது கொடிய நோயாகவிருந்தது. இப்பொழுது கட்டுப்பாட்டில் ... நோயி னால் இந்தியாவி... இடைப்பட்ட காலப்பகுதி... நோயாளிகள் இறந்துள்ள... 'கறுப்புச்சாவு' (BLAC... அழைத்தார்கள். 1934 வா... ஆசியாவிலிருந்து ஐரோப்... 1665 காலப்பகுதி யில்... இந்நோய் தாக்கியது. ஆ... இறந்தார்கள். கொள்ளை... பூச்சிகள் எல்லாவற்றிலும... எலித்தெள்ளுக்காகும்.

## வாயில் நஞ்சுள்...

சிலந்திகள் எல்லாம் ந... ஒரு சில இனங்களே அ... விடமுடையவை. சிறியதி... பல அளவுகளிலும் பல சி... சிலந்திகளில் முதற்சோடி... கொடுக்குக் கொம்புகளில் ந... குமிருக்கும். சிலந்திகள் உ... தில்லை; நசுக்கி சாற்றை... இரையை மயக்குவதற்கும்,... பாடு அடையச்செய்து உறி... வும். சில சிலந்தியினங்க... போல பக்கவாட்டாக நக... உதவும். சில சிலந்தியின... கீழாக நகர்ந்து கொட்ட உ... வேண்டுமென்றே மனிதனை... படும்போது அல்லது அத... போது தற்பாதுகாப்புக்காக...

## வாலில் விடமுள்... கொடுக்க...

கொடுக்கன்களில் விட... கடைசி வயிற்றுத்துண்டத்... ஐந்து வயிற்றுத்துண்டுகளு... போலிருக்கும், மூட்டுக்கள்... கொடுக்கன்கள் அரியவை... ஆயினும் கூடிய விட முடை... பொதுவாகக் கறுப்பு நிறமு... கள் வெளிறிய நிறமுடைய... வரண்ட கற்பாங்கான பிர... தரங்களுக்குமுரிய தேள்கள்... கொடுக்கன்கள், தேள்களி... தியைப் பாதிக்கும், அதன... நடவடிக்கைகள் எடுக்காது... பாரதூரமானதாக மாறலாம்...

## பூச்சி நன்...

பல இனப்பூச்சிகள் கேடு... ளைக் கொன்று புசிப்பதன்... றன. கேடு எனும் போது, ... சூழலுக்கா? தேனீக்கள் மனி... தேனைத் தருகின்றன தே... போது தானே கொட்டுகின்... சேர்க்கையை ஏற்படுத்தி... தேன்கூடு உள்ள பழத்தோ... அதிகம் என்பது யாவரும்... டிகள் கேடு விளைவித்தாலு... ளும் அந்துப்பூச்சிகளும்... இனத் தாவரங்களில் மகரந்... போய்விடும். வண்டுகள், து... மகரந்தச் சேர்க்கைக்கு உத... பூச்சிகளை மனிதன். உண...

## - சூக...

மேலும் சில இனப்பூச்... களை உணவாகக் கொள்வ... கட்டுப்படுத்துகின்றன. நும்... மடந்தைப்பறவைகள்,(LADY... இந்த வகையைச்சாரும். ம... பன அழகான வண்டுகள், உ... உடையவை, ஏபிட்டுக்களை... IDS) கட்டுப்படுத்துவதில் ... றுகின்றன. பல பறவைகள்,... விலங்குகளுக்கு பூச்சிகளே ... களைக்கட்டுப்படுத்துவதில் ... களைச்சாரும்.

## சற்றே சிந்தி...

பீடைகளைக்கட்டுப்படுத்த... பயன்படுத்தும் போது, ப... இறக்கநேரும். மேலும் பூச்... கொள்ளும் பறவைகளும் ... பாதிக்கப்படுகின்றன. சூழலி... ஒன்றில் ஒன்று சார்ந்தே வா... இந்த இடைத்தாக்கங்களுக்... சமநிலை நிலவும். சமநிலை... பிரச்சினை... நிலை த... பாலும் ம... அமைந்து... சூழலை உ... கிக் கொ... கள் தாம... ளும் ஒரு ... மொழியுட... செய்வோம்...

IF YOU WIS... LET THE S...




தர்மராஜா வில்சன்
இல.7

இரட்டை இலை தோடம்பழ சின்னத்துக்கு வாக்களியுங்கள்.
* ஒரு காத்திரமான அரசியல் தலைமையைக் கட்டியெழுப்ப...
* திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழர் தாயகத்தின் சுயாட்சிக்காக...
* சொந்த மண்ணில் அகதிகளாகும் அவலநிலைக்கு முடிவுகாண...

சுயேச்சைக் குழு - 1 X



சுரேஸ் பிரேமச்சந்திரன்

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் தலைமை)

(78082)

# ச்சிகள் -2

ப்பாட்டில் உள்ளது. கொள்ளை இந்தியாவில் மாத்திரம் 1896-1917 லப்பகுதியில் பத்து மில்லியன் றந்துள்ளனர். கொள்ளை நோயை (BLACK DEATH) என்றும் 1934 வாக்கில் கொள்ளை நோய் 'ஐரோப்பாவை' அடைந்தது. 1563- தி யில் இலண்டன் மாநகரை யெது. ஆயிரக்கணக்கில் மக்கள் கொள்ளை நோய் காரணமாக வற்றிலுமே மனி தன் பயப்பட்டது ாகும்.

## நஞ்சுள்ள சிலந்திகள்

எல்லாம் நஞ்சுள்ளவை. ஆயினும் களே அதிக அளவில் கொடிய சிறியதிலிருந்து பெரியதுவரை ும் பல சிலந்தியினங்கள் உண்டு. தற்சோடி வாய்த்தூக்கங்களாகிய ம்புகளில் நச்சுச் சுரப்பியும் கொடுக் ந்திகள் உணவைக் கடித்து உண்ப ி சாற்றை மாத்திரம் உறிஞ்சும். வதற்கும், உள்ளடக்கத்தைச் சமி ய்து உறிஞ்சுவதற்கும் நஞ்சு உத தியினங்களில் கொடுக்கு இடுக்கி ாக நகர்ந்து இறுக்கிக் கொட்ட லந்தியினங்களில் கொடுக்கு மேல் கொட்ட உதவும். எந்தச் சிலந்தியும் மனிதனைத் தீண்டுவதில்லை; மிதி லது அதனைத் தாக்க முற்படும் ாப்புக்காகவே தீண்டும்.

## விடமுள்ள தேள்களும் ாடுக்கன்களும்

ளில் விடப்பையும், கொடுக்கும் த்துண்டத்தில் இருக்கும். கடைசி துண்டுகளும் ஒடுக்கப்பட்டு வால் ட்டுக்கள் துலக்கமாகத் தெரியும். பெரியவை. தேள்கள் சிறியவை. முடைய கொடுக்கன்கள் ப்பு நிறமுடையவையாகவும், தேள் நிறமுடையவையாகவும் இருக்கும். கான பிரதேசங்களுக்கும், வனாந் ப தேள்கள் மிகவும் விடமுடையவை, தேள்களின் விடம் நரம்புத் தொகு ும், அதனால் உடனடி நிவாரண எடுக்காது விட்டால் விளைவுகள் மாறலாம்; இறப்பும் நேரிடலாம்.

## ச்சி நண்பர்கள்

சிகள் கேடு விளைவிக்கும் பூச்சிக ுசிப்பதன் மூலம் நன்மை பயக்கின் போது, யாருக்கு, மனிதனுக்கா? க்கள் மனிதனைக் கொட்டினாலும், ன்றன தேனை எடுக்க முற்படும் கொட்டுகின்றன. மேலும் மகரந்தச் ற்படுத்தி நன்மை பயக்கின்றன. பழத்தோட்டங்களில் விளைச்சல் பாவரும் அறிந்ததே. மயிர்க்கொட் ளவித்தாலும், வண்ணத்துப்பூச்சிக ிகளும் இல்லையென்றால் பல மகரந்தச் க்கை நிகழாது ர்டுகள், குளவிகள், ஈக்கள் கூட கக்கு உதவுவதுண்டு. சில இனப் ன். உணவாகக் கொள்கின்றான்.

## குகன் -

இனப்பூச்சிகள் பிறஇனப் பூச்சி க் கொள்வதன் மூலம் அவற்றைக் றன. தும்பிகள், கும்பிடுபூச்சிகள், ள்,(LADY BIRDS) போன்றவை சாரும். மடந்தைப்பறவைகள் என் ர்டுகள், உடலில் நிறப்புள்ளிகளை ட்டுக்களைக் (அழுக்கணை-APH- துவதில் இவை பெரும் பங்காற் றவைகள், பாலூட்டிகள் மற்றும் ுச்சிகளே முக்கிய உணவு. பூச்சி த்துவதில் முக்கிய பங்கு சிலந்தி


## சிந்திப்போமா

ட்டுப்படுத்த பீடைநாசினிகளைப் ாது, பயனுள்ள அங்கிகளும் லும் பூச்சிகளை உணவாகக் வகளும் மற்றும் அங்கிகளும் ன. சூழலில் அங்கிகள் எல்லாம் ந்தே வாழ்க்கை நடத்துகின்றன. கங்களுக்கிடையே எல்லாம் ஒரு சமநிலை தளம்பும்போதுதான் பிரச்சினைகள் எழுகின்றன. சம நிலை தளம்புவதற் குப் பெரும் ாலும் மனிதனே காரணமாக அமைந்து விடுகின்றான். மனிதன் சூழலை உணர்ந்து வாழப் பழ கிக் கொண்டால் பல பிரச்சினை ள் தாமாகவே விலகிக்கொள் ும். ஒரு பழைய ஆங்கிலப் பழ மொழியுடன் கட்டுரையை நிறைவு செய்வோம்.


F YOU WISH TO LIVE AND THRIVE
LET THE SPIDER RUN A LIVE'




ஈயின் கீடங்கள்/குடம்பிகள் (MAGGOTS)



தெள்ளின் வாய்ப்பகுதிகள்




அயன மண்டல எலித்தெள்ளு




இடதுபுறம் - சில சிலந்திகளின் கொடுக்குகள் உள்நோக்கி நகரும். வலதுபுறம் - சிலவற்றின் கொடுக்குகள் மேல்நோக்கி நகரும்.

சிலந்தியின் நச்சுப்பையும், கொடுக்கும், இறுக்கியும்.



கொடுக்கன் தத்துவெட்டியனைத் தாக்குகின்றது.



கொடிய விடமுள்ளதேள்களில் ஒன்று, வட ஆபிரிக்காவிற்குரியது.




கொடிய விடமுள்ளதேளில் பிறிதொன்று, தடித்தவால் கொடுக்கன் (FAT TAILED SCORPION) இதுவும் வட ஆபிரிக்காவிற்குரியது.




விமானமூலம் பீடை நாசினியைத் தெளிப்பதற்குத் தயாராகுகின்றார்கள்.




வனாந்தர வெட்டுக்கிளி (DESERT LOCUST)





நுளம்பின் வாய்ப்பகுதிகளும் புகுத்தி உறிஞ்சும் முறையும்.




செற்சி ஈ (TSETSE FLY) மனிதனின் குருதியைச் சுவைக்கின்றது.




மயிரை இறுகப் பற்றுவதற்கு உதவும் பேனின் காலின் கொடுக்கு முடிவு. (CLAW- கொடுக்கு)




மூட்டைப்பூச்சிகள், படுக்கைவிரிப்பின் மேல்.




முயலின் மயிரில் தெள்ளு (RABBIT FLEA)



லேடிபேட்(LADY BIRD) வண்டு ஏபிட்டைத் தாக்குகின்றது. அருகில் கொல்லப்பட்ட ஏபிட்டுக்களும், உயிருள்ள ஏபிட்டுக்களும் காணப்படுகின்றன.



'குசினி நாயகி' விசுக்கோத்தைச் சுவைக்கின்றது.



நுளம்பு குருதியை உறிஞ்சுகிறது. நுளம்பின் வயிறு குருதியால் புடைத்திருப்பதைக் கவனியுங்கள்.




ஈயின் தலையும் ஒற்றி உறிஞ்சுவதற்கு உதவும் துதிக்கையும்.



கறையான்களால் தாபிக்கப்பட்ட ஒரு உயுரமான கோபுரம்.




கொப்புள வண்டு (BLISTER BEETLE). மூட்டுக்களுக்கு இடைப்பட்ட துண்டங்களில் நச்சுக்குமிழ்கள் துலக்கமாகத் தெரிகின்றன.



(இடது புறம்) நீலப்போத்தல் ஈ (BLUE BOTTLE) (வலது புறம்) பச்சைப் போத்தல் ஈ(GREEN BOTTLE) இவை பறக்கும் போது ரீங்காரம் இடுவதால் BLOW FLIES என அழைக்கப்படும் புரூ பொட்டிலை சாதாரணமாக குசினியில் தரிசிக்கலாம். பறந்து திரியும் பொது மீன், இறைச்சி போன்றவற்றைக் கண்டால் அவற்றில் முட்டைகளை இட்டுவைக்கும். கிறீன் பொட்டில் இறந்த விலங்குகளில் முட்டைகளை இட்டுவைக்கும்.



உலகத்திலேயே கொடிய விடமுள்ள எறும்பு, ஆஸ்திரேலியாவிற்குரிய கறுப்பு எருத்து நாய் எறும்பு(BLACK BULL-DOG ANT)




மர எறும்பு (WOOD ANT) உடலை வளைத்து போமிக்கமிலத்தைப் பீய்ச்சுகிறது. நமது பிரதேசத்திற்குரிய மர எறும்பு 'CARPENTER ANT' என அழைக்கப்படும்)



கொலறாடோ வண்டு (COLORADO BEETLE) உருளைக்கிழங்குத் தாவரத்தில்.



ஆபிரிக்க போர்வீர எறும்புகள் (ARMY ANT) ஒரு பாம்பைத் தாக்குகின்றன.



வீட்டு ஈ (HOUSE FLY)



விமானம் மூலம் மருந்து தெளிக்கப்படுகின்றது. காற்றுடன் எங்கெல்லாம் சென்று படியுமோ?

## செய்திச் சாரம்

### மீன் விலை அதிகரிப்பு

உரும்பிராய்,செப்.11

போதியளவு மீன்வகைகள் சந்தைகளுக்கு வராததனால் அதன் விலை அதிகரித்துள்ளது. சுன்னாகம் சந்தைக்கு மீன் வாங்க வருபவர்கள் கடந்த சில தினங்களாக ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. (க-154)

### புதிய கட்டடத்தில் உரும்பிராய சந்தை

உரும்பிராய்,செப்.11

உரும்பிராய் பொதுச் சந்தை புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. இதற்கென வலி. கிழக்கு பிரதேச சபையினால் உரும்பிராய்ச் சந்தியில் அமைக்கப்பட்ட கட்டடம் வைபவரீதியாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (க-154)

### இடம்பெயர்வு

உரும்பிராய்,செப்.11

தென்மராட்சிப பகுதியில இருந்து இடம்பெயர்ந்து வந்து உரும்பிராய், நீர்வேலிப் பகுதிகளில் தங்கியிருந்தவர்கள், இப்போது உடுவில் சுன்னாகம் பகுதிகளை நோக்கி நகரத் தொடங்கியுள்ளனர். (க-154)

### விவரம் திரட்டல்

தென்மராட்சி,செப்.11

ஆசிரிய நியமனம் கிடைத்து தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் பல்கலைக்கழக மாணவர்களின விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

ஆசிரியர்களுக்கான சம்பளம் பெறும் இந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் நிதியும் பெற்று வருவது தெரிய வந்ததை அடுத்து ஆசிரியர்களாகக கடமையாற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் விவரங்கள் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

### வாக்களிக்க முடியாதநிலை

தென்மராட்சி,செப்.11

நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கு வாக்கெடுப்பு நிலையங்களில் கடமையாற்றத் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சிப் பகுதி அரச ஊழியர்கள் பலர் தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள அரச ஊழியர்களுக்கு தபால் மூல வாக்களிப்புச் செய்வதற்கு உரிய படிவங்கள் தேர்தல் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் படிவத்தில கோரப்பட்ட விவரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாக்காளா பட்டியல் உரிய காலத்தில் கிடைக்காததால் விண்ணப்பிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பத்திற்கான இறுதித்தினம் கடந்த 7ஆம் திகதி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது. (க-117)

### ரஷ்யாவில் யாழ்.வாசி மரணம்

தென்மராட்சி,செப்.11

சாவகச்சேரி இளைஞர் ஒருவர் ரஷ்யாவில் மர்மமான முறையில் மரணமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

13 வருடங்களுக்கு முன்னர் ரஷ்யாவுக்கு உயர்கல்வி கற்கச் சென்ற இந்த இளைஞர் அங்கேயே தொழில் செய்து வந்ததாகவும் கடந்த மாதம 29 ஆம்திகதி அங்கு இடம்பெற்ற விருந்து ஒன்றில் கலந்து கொண்ட வேளையில் இரத்த வாந்தி எடுத்து மரணமானதாகவும் இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பெருங்குளத்தைச் சேர்ந்த பத்மநாதன் கிரிதரன் (வயது 33) என்பவரே மரணமானவராவார். (க-117)

### இளைஞர் காயம்

கொழும்பு,செப்.11

திருகோணமலைக் கடலில் நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் ஜீவச்செல்வன் என்ற தமிழ் இளைஞர் படுகாயமடைந்தார்.

இவர் திருக்கடலூரைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# புலிகளுடன் பேச்சு நடத்தாமல் என்றைக்குமே தீர்வு கிடைக்காது!

## பிரசாரக் கூட்டத்தில் ரணில்



கொழும்பு,செப்.11

"இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு காணப்பட வேண்டுமானால் பிரச்சினையுடன் தொடர்புள்ள சகல தரப்பினருடனும் பேசியே ஆகவேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கம் காணப் படாவிட்டால் எத்தனை வருடங்கள் சென்றாலும் தீர்வுகாணப்பட முடியாது"

ஐ.தே.கட்சித தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இரத்மலானையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டத் தைத் தயார்படுத்தி அதனைப் புலிகளுடன் சமர்ப்பித்துப் பேசுவதன் மூலம் மட்டுமே சாதகமான சூழலை உருவாக்க முடியும். அதனைச் செய்வதற்கான அடித்தளத்தை நாம் போட்டுள்ளோம்.

அடுத்தது வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது. முதலில் சீர்குலைந்து போயுள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும்.

ஆறு ஆண்டுகளில் சீர்குலைந்து போயுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதே நாம் பதவிக்கு வந்தவுடன் மேற்கொள்ளும் முதல் நடவடிக்கையாகும். சர்வதேச முதலீட்டாளர்களை மீண்டும் இங்கு வரவழைத்து கூடுதல் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவோம். புதிய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் பொருளாதாரத் திட்டத்தை அறிமுகப்படுத்தி மிகக் குறுகிய காலத்திற்குள் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்று அவர் தெரிவித்தார். (ஐ-10)

### ஜே.வி.பி. தலைவர் நாடு திரும்புவார்

கொழும்பு,செப்.11

ஜே.வி.பி. கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க அடுத்த இருவார காலத்துக்குள் நாடு திரும்பி விடுவார் என்று கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சோமவன்சவை நாட்டுக்குள் அழைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ-186)

## தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு

# 90 பேர் அடங்கிய ஐரோப்பிய குழுவினர் இவ்வாரம் வருவர்

கொழும்பு,செப்.11

ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேர்ந்த 90 பேர் அடங்கிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் இவ்வாரம் கொழும்பு வந்து சேர்வர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவின் அழைப்பின் பேரில் இவர்கள் இங்கு வருகின்றனர். ஐரோப்பிய யூனியனில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலங்கை வருவது இதுவே முதல் முறையாகும். அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான 'பபிரெல்' (PAFFREL) என்னும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனம் ஐரோப்பிய கண்காணிப்பாளர்களுக்கு உதவும் என்று 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது. (ஐ-20)

# வன்னி செல்ல படையினரின் பெற்றோர் புலிகளிடம் அனுமதி கோருகின்றனர்

கொழும்பு,செப்.11

புலிகள் இயக்கத்தினரின் தடுப்புக் காவலில் இருக்கும் படைவீரர்கள் மற்றும் சிவிலியன்களைப் பார்வையிடுவதற்கு அவர்களது பெற்றோர்களும், உறவினர்களும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று திரும்புவதற்கு 'தமிழ் நெற்' ஊடாகப் புலிகள் இயக்கத்தினரிடம் அனுமதி கோரியுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு யுத்தத்தின் போது காணாமல்போயுள்ள படையினரது உறவினர்களது சங்கம் மேற்படி கோரிக்கையை 'தமிழ் நெற்' ஊடாக விடுத்திருப்பதாகச் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும குறிப்பிட்டதாவது -

புலிகள் இயக்கத்தினரின் தடுப்புக்காவலில் இருக்கும் எமது உடன் பிறப்புக்களையும் பிள்ளைகளையும் பார்வையிடுவதற்காக இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசம் சென்று திரும்ப அனுமதிக்கும் படி பாதுகாப்பு அமைச்சைக் கேட்டு வருகின்றோம். ஆனால இன்னும் எமக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை. அதனால் நாம் பாகாப்பு அமைச்சின் அனுமதியின்றி சுய விருப்பின் பேரில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்கு வரமுடிவு செய்துள்ளோம். அவ்வாறு நாம் வருகை தருவதை நீங்கள் அனுமதிப்பீர்களா? வடக்கு-கிழக்கு யுத்தத்தின் போது காணாமல்போயுள்ள படைவீரர்களின் பெற்றோர்களும் உறவினர்களுமாக ஆயிரத்து எண்ணூறு(1800) பேர் எமது அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர். நாங்கள் எல்லோருமே வருகைதர அனுமதிப்பீர்களா? அல்லது எத்தனை பேர் வரவேண்டும் என்பதை அறியத்தாருங்கள்.

நாம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்கு வருகை தரும்போது யுத்தநிறுத்த மொன்றை மேற்கொள்ள முடியுமா? என்றும் அக் கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. புலிகள் இயக்க அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வனுக்கு முகவரியிட்டு இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கைக்கு கிடைக்கும் பதிலை அடிப்படையாக வைத்து எமது சங்க விசேட பொதுச் சபையை எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பில் கூட்டி இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்கு சுய விருப்பின் பேரில் செல்ல விரும்புவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்படும்.

எமது கோரிக்கைக்குப் புலிகள் இயக்கத்தினர் வழங்கும் பதில் பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கும் கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-6)

### மருத்துவபீட மாணவர் வரவேற்பு விழா

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினால் புதிய மருத்துவபீட மாணவர்களுக்கான வரவேற்பு விழா கடந்த 4 ஆம் திகதி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த நிகழ்வில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறவுள்ள நிகழ்வுகளும் செயற்பாடுகளும் வருமாறு:-

காலை 8.30 - 9.30 மணிவரை பீட செயற்பாடுகள் குறித்த முன்னோட்டம், மருத்துவ நூலகம்.

★ முற்பகல் 11.00-12.00 மணிவரை சமூகவியல் மற்றும் சமூக மருத்துவவியல் பற்றி என்.சண்முகலிங்கம் கருத்துரை வழங்குவார்.

★ குழுச் செயற்பாடுகள்.(ஐ-10)

### செல்வச்சந்நிதி தேர் உற்சவம்

பிரசித்தி பெற்ற தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோயில் இரதோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கும், தீர்த்தோற்சவம் மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கும் நடைபெறும்.

தீர்த்தோற்சவத் தினத்தன்று மாலை 5மணிக்கு இடம்பெறும் மௌனத் திருவிழாவுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுறும்.

தேர், தீர்த்த உற்சவங்களை ஒட்டி வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் தனியார் சிற்றூர்திச் சங்கங்களும் விசேட போக்குவரத்து வசதிகளைச் செய்துள்ளன.

### நிவாரண 'பெர்மிட்' வழங்கல்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய இரு மாதங்களுக்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்கள் பெறுவதற்குரிய 'பெர்மிட்'டுக்கள் இன்று திங்கட்கிழமை முதல் அந்தந்த கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-117)


**குருபூர்ணிமா மலர் விற்பனை**

செல்வச் சந்நிதி முருகனின் தேர்த்திருவிழாவான நாளை செவ்வாய்க்கிழமை ஆலயத்தில் அமைக்கப் படும் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம விசேட கருமபீடத்தில் குருபூர்ணிமா மலர் விற்பனை செய்யப்படவிருக்கின்றது.

மலரின் விலை ரூபா 50/=

மலருடன் அழகிய முருகன் படம் இலவசமாக வழங்கப்படும்.

*ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்.*

*பருத்தித்துறை.* (C/12887)

**இடமாற்றம்**

இந்நாள் வரையில் சுன்னாகம் மக்கள் வங்கிக்கு முன்பாக இயங்கி வந்த

**T.S. சுந்தரம்**

எனும் வியாபார ஸ்தாபனம் இன்று (11-09-2000) திங்கட்கிழமை முதல் காங்கேசனதுறை வீதியில் அமைந்துள்ள 13 ஆம் இலக்க கட்டடத்தில தொடர்ந்து இயங்கவுள்ளது என்பதனை வாடிக்கையாளர் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

(78168) - உரிமையாளர்

**உளவியல் கருத்தரங்கு**

கருப்பொருள்: 'உணர்வுகளின் தாக்கமும், செல்வாக்கும்"

கருத்துரை வழங்குபவா: அருட்திரு. எஸ் டேமியன் அ. ம. தி. *(உளவியலாளர்)*

காலம்: 13-09-2000 (புதன்கிழமை)

நேரம்: பிற்பகல் 3.30 (இ.நே)

இடம்: புனித/அந்தோனியார் ஆலய மண்டபம், மானிப்பாய்.

*திரண்டு வருக பலன் பெறுக.*

இயக்குநர், "அகவொளி"

(78262)

**வட்டு. மத்திய கல்லூரி**

பழைய மாணவருக்கான

**பவளவிழாக் கட்டுரைப் போட்டி**

*கட்டுரைக்கான தலைப்பு* :-

'இருப்பத்தோராம் நூற்றாண்டில் வட்டு. மத்திய கல்லூரி'.

முடிவு திகதி: 15-10-2000

மேலதிக விவரங்களுக்கு தயவு செய்து கல்லூரியோடு தொடர்பு கொள்ளவும்.

*பவள விழாச்சபை, வட்டு. மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.* (78193)

சி. கேசவன், போட்டி இணைப்பாளர்.

உ

சிவமயம்

**புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு**

130, K.K.S. வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் (161A) K.K.S. வீதியில் இயங்குகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**ஸ்ரீ காந்த் எசன்ஸ் அன் குறோசறீஸ்**

இன்று (11-09-2000) திங்கட்கிழமை காலை 10.30மணியளவில் (161A) K.K.S. வீதி எனும் புதிய இடத்தில் ஆரம்பிக்க உள்ளதென்பதையும் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(161 A) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P:-021-2219

உரிமையாளர், A. ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்ரீ)

(78258)

# வரதர் அணியுடன் இணைந்து போட்டியிட முடிவு செய்தது ஏன்?

## மக்கள் ஜனநாயகப் பேரவை விளக்கம்

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எவ். வரதர் அணியுடன் இணைந்து போட்டியிட முடிவு செய்தது ஏன் என்பது குறித்து மக்கள் ஜனநாயகப் பேரவை பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:**

இந்த நாடாளுமன்றத் தேர்தல் வரை தமிழ் பேசும் மக்கள் பட்ட துன்பங்கள் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை. தமிழர்கள் இடர்காலக் கொடுப்பனவாலோ, உலர் உணவு நிவாரணங்களாலோ ஈடுசெய்ய முடியாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் காலமிது.

இந்த நிலையில் 20 அணிகள் யாழ். மாவட்டத்தில் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்குக் காரணம் என்ன? யாழ். மக்கள் ஒன்றும் அறியாதவர்கள், ஏமாளிகள் என்ற எண்ணமா? நாடாளுமன்றத் தேர்தலை யாழ். வாசிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்கள்.

இவற்றை நன்றாகச் சிந்தித்தபின்பே மக்கள் ஜனநாயகப் பேரவையானது சில முடிவுகளை எடுத்துள்ளது. அவற்றைப் பகிரங்கமாக மக்கள் மத்தியில் முன் வைக்கின்றோம்.

மக்களின் நலன்கருதி ஒட்டுமொத்தமான ஐக்கியத்தைப் பற்றிச் சிந்தித்த நாம் அம்பாறையில் தமிழ் மகாசபையின் கூட்டணியை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்றுக்கொள்ளாததையும் திருகோணமலையில் நடைபெற்ற உண்ணாவிரதத்துக்கு பயன் இல்லாது போனதையும் மற்றும் இங்குள்ள கட்சிகளின் சார்பு நிலைகள், அதீத தன்னம்பிக்கைகள் காரணமாக ஒட்டுமொத்த ஐக்கியம் என்பது தமிழ்மக்கள் மத்தியில் சாபக்கேடான கேள்விக் குறியாகவே உள்ளது என்பதைத் தீர்மானித்தோம்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் நன்மை கருதி குறைந்த பட்சக் கூட்டென்பது தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்து குறைந்த பட்சம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஓர் இணக்கப்பாட்டைக் காண முன்வந்தோம்.

★ கோடிக்கணக்கான ரூபாக்களையும், சொத்துக்களையும், தினந்தினம் அழிவுக்குட்படுத்தும் யுத்தத்தை உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★ மக்கள் இதுவரை பட்ட அவலங்களுக்கு ஓர் இடைக்கால அமைதி வேண்டும்.

★ இவ் இடைக்கால அமைதியூடாகத் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய — வடக்கு — கிழக்கு இணைந்த ஒரு நிரந்தரத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இவ்வாறான அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடனேயே ஈ.பி.ஆர்.எல்.எவ் [வரதர் அணி] உடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தியது. இதனூடாகவே நாம் சுயேச்சை அணியாக இணைந்து போட்டியிட உடன்பட்டுள்ளோம்.

(ஐ-7)

# பாராட்டுகின்றோம்



## சிங்க வல்லிபுரம் பரமசிவம்

(J. P- All Island)

சமாதான நீதிவானாக யாழ்ப்பாண நீதிமன்றில் இப்பதவிக்குரிய சத்தியப்பிரமாணம் எடுக்கும் இன்றைய நன்னாளில் அவரின் சேவைகள் பற்றிய சில குறிப்புக்கள் வருமாறு:-

★ நல்லூர் அரிமாக்கழக ஸ்தாபக உறுப்பினராவார்.

★ யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தை 1985/ 1986 இல் புனரமைத்து அதன் செயலாளராக ஐ. பி. கே. எவ். காலத்தில் கடமையாற்றியவர்.

★ 1992-1993ஆம் ஆண்டுகாலப் பகுதியில் நல்லூர் அரிமாக்கழகத் தலைவராய் இருந்து செம்மணி இந்துமயான சபையை உருவாக்கி அபிவிருத்தி வேலைகள் செய்தவர்.

★ மேற்படி வருட சிறந்த அரிமாக்கழகத் தலைவராய்த் தெரிவு செய்யப்பட்டு அமெரிக்கத் தலைமை அலுவலகம் விசேட தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

★ 1993—1994 ஆம் ஆண்டின் நல்லூர் ஓய்வூதியர் சங்கத் தலைவராய் இருந்து சங்க வளர்ச்சியை விரிவுபடுத்தியவர்.

★ அரசசார்பற்ற அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் இயக்குநர் சபைச் செயலாளராகவும், நிர்வாக உத்தியோகத்தராகவும் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை செயற்பட்டு பல நிவாரண, சுயதொழில் வாய்ப்பு உதவிகள் செய்து கொண்டிருக்கிறார்.

★ அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்த நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவின் அரச ஓய்வூதியர் சங்க இயக்குநர் சபை உறுப்பினராவார்.

★ யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGOS) இணையத்தின் (Consortium) நடப்பாண்டு உபதலைவராய் இருக்கிறார்.

★ யாழ். ப.நோ.கூ.ச. நல்லூர்க்கிளை இல - IIஇன் நிர்வாக சபை உபதலைவராவார்.

★ யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் ப.மா. சங்கச் செயலாளராய் பல வருடங்களாக இருந்து இப்பொழுது பொருளாளராய்ப் பணியாற்றுகின்றார். இவர் லண்டனில் இக்கல்லூரி ப.மா. சங்கக் கிளை ஒன்று ஸ்தாபித்து இயங்க வைத்தபின் நாடு திரும்பியவராவார்.

★ நல்லூர் கல்வியங்காடு ஸ்ரீ சத்தியசாயி பஜனை— சேவா நிலையத் தலைவராய் இருக்கின்றார்.

★ நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய போஷகர்களுள் ஒருவரும் பரிபாலன சபைச் செயலாளராய் பல வருடங்கள் பணியாற்றியும் ஆலய அபிவிருத்தி வேலை பல செய்தவராவார்.

★ இலைமறை காயாக இருந்து இவர் செய்த சேவைகளும் அர்ப்பணிப்பும் இவரை சமாதான நீதிவான் பதவிக்கு உயர்த்தியுள்ளது. குறிப்பாக தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். எங்கள் அரிமாக்கழக உறுப்பினர்கள் சார்பாக பாராட்டுகின்றோம்; ஆசி கூறுகின்றோம்.

**கே. ஜெயரட்ணம்**
(இளைப்பாறிய அதிபர், பணிப்பாளர்,
தொழில்நுட்பக் கல்லூரிகள்
வட—கிழக்கு மாகாணம்)
தலைவர்
நல்லூர் லயன்ஸ் கழகம்.

(78253)

# சந்நிதியான் ஆலய உற்சவ விசேட நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 11

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் விசேட நிகழ்வில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 'உதித்தனன் உலகமுய்ய' எனும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் உரை நிகழ்த்துவார்.

(க-173-30)

# சமூக விஞ்ஞான படிப்பு வட்ட கலந்துரையாடல்

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் 'ஒழுக்கத்தில் பாலியலும் பாலியல் ஒழுக்கமும்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும்.

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற பதிவாளர் அண்ணா இராஜேந்திரம் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் இ. சிவசங்கர் கருத்துரை வழங்குவார்.

(க)


# சமூகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம். செப். 11

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய ஆசிரியர்கள் அனைவரையும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு வருகை தருமாறு கல்லூரி அதிபர் மு. பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

(க)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

மண்ணில் 04—09—1948 விண்ணில் 23—09—1999

திதி: 11 — 09 — 2000 திரியோதசி

எங்கள் அன்புத் தந்தையே!
புன்னகை சிந்திடும்
பூமுகம் கொண்டவரே!
பூக்களாய் மலர்ந்த எம்மை
நீர் ஊற்றி வளர்த்தீரே!
பிரிந்து ஈராறு மாதங்கள்
தவிக்கிறோம் நாங்கள்.

மீளாத்துயருடன் நினைவு கூரும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை.**

எருவன்,
கொடிகாமம்.

(78123)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் ஆறுமுகம் பொன்னுச்சாமி

(பிரபல வர்த்தகர்)

தோற்றம் 11 — 10 — 1918 மறைவு 12 — 08 — 2000

எங்கள் அனைவரதும் நல்வாழ்விற்கு
வழிகாட்டிய எங்கள் குடும்ப — குல
விளக்கு அன்பு ஐயாவே!
உங்களை எங்கு நாம் காண்போம் இனி?

இன்று (11-09-2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமகன்.**

தகவல்:
மகன்: ஆறுமுகநாதன்
(போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்)

இணுவையன் ஒழுங்கை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(78189)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள, பாவனையிலுள்ள 2 KV (2000 wt) ஜமகா ஜெனரேற்றர் உடனடியாக விற்பனைக்கு உண்டு. உடனடித் தொடர்புகளுக்கு:- 87, பிறவுண் வீதி (நீராவியடிப்பிள்ளையார் கோயில் அருகில்), யாழ்ப்பாணம். (78198)

கடந்த ஓகஸ்ரில் நடை பெற்ற (2000 A/L), பௌதிகவியலுக்கான விடைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 248, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (College of Commerce க்கு அருகில்) (78256)

நீளம் - 10 அடி, அகலம் - 05 அடி கொண்ட ஸ்டீல் மேசை பொமிக்கா பதிக்கப்பட்ட ரெயிலர் மார் துணிபோட்டு வெட்டுவதற்கு என்று பிரத்தியேகமாக செய்யப் பட்டதும் மற்றும் ஸ்டீல்கபேட கண்ணாடி பதிக்கப்பட்டதும் தைத்த உடுப்புகள் வைக்கக் கூடியதும் மற்றும் ஸ்டீல் பைலகபேட் என்பனவும் உடன் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகளுக்கு: இல. 75, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (78182)

### இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த. மாணவர்கள் தமிழ் மொழியும் இலக்கியமும் கற்க உதவக்கூடிய சிறுகதை, நாவல், நாடகம், இலக்கியவிமர்சனம் பெற்ற நான்கு பிரிவுகளில் அமைந்த 38 கட்டுரைகள். அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியவை. (78020)

### இசை வகுப்புகள்

ஓகன் (கீபோட்), மிருதங்கம் ஆகியவற்றுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. தொடர்பு: ஏ.எஸ். ரஞ்சித், பழைய பொலீஸ் நிலையம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (78195)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நெடுந்தீவு,செப்.11

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெறும்.

இதில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன, பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி உட்படதிணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் கலந்து கொள்ளுவார்கள் எனத் தெரிகிறது. (ஐ-111)

### புலி உறுப்பினர் இருவர் பலி

வவுனியா,செப்.11

யாழ். குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'சூரியக் கதிர்' படை நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்த மேலும் இருவரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் நேற்றுக் காலை அறிவித்தனர்.

* வை.வேலரசி (யோகராசா கல்பனா - யாழ்ப்பாணம்)
* இசைநிலா (குமாரசாமி இந்திராதேவி - மன்னார்)

ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர். (ஐ-8)

### பொலீஸார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை


கொழும்பு,செப்.11

மன்னார், புதுக்குடியிருப்பு, எருக்கலம்பிட்டி பொலீஸ் காவலரணுக்கு வழங்கிய முட்கம்பிச் சுருள்களை அந்தப்பகுதியிலுள்ள பொது மக்களுக்கு விற்று பணம் பெற்றுக் கொண்ட ஸார்ஜன் இன்ஸ்பெக்டருக்கும், இரு பொலீஸ் கான்ஸ்டபிள்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மன்னார் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

எருக்கலம்பிட்டி 5ஆம் கட்டை பொலீஸ் காவலரணுக்கு முட்கம்பி வேலி அமைப்பதற்காக முட்கம்பிகள் வழங்கப்பட்டிருந்தன. இவையே பொதுமக்களுக்குப் பகுதி பகுதியாக விற்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

---

## 5 ஆம் ஆண்டு நினைவுகள்



**அமரர் வ.வே. நவரட்ணக்குருக்கள்**
(ஆசிரியர், யா/வேலாயுதம் ம.வி., பருத்தித்துறை)

ஆண்டவன் படைப்பு: 11-08-1941 ஆண்டவன் அழைப்பு: 07-09-1995

திதி: 11-09-2000

எந்தையே! எந்தையே!
இவ் எழுதிரை வளாகத்துள்
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
நீர்மட்டும் விலகிவிட்டீர்!
வையத்துள் வாழ்வாங்கு நாம் வாழ
வானுறையும் தெய்வமாம் நீர் எம்மை
வாழ்த்த வேண்டும்.

- குடும்பத்தினர்.


*"நமிலாஸ்",*
*நெல்லண்டை,*
*பருத்தித்துறை.*

(78181)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 28 — 12 — 1945



விண்ணில் 23 — 09 — 1999

அமரர்
**வைத்திலிங்கம் மதியாபரணம்**

திதி: 11-09-2000

எம்மையெல்லாம் மீளாத்துயரில்
விட்டுச் சென்ற அன்புத் தந்தையே!
ஏங்குதையா எம் இதயம்
தேடுதையா கண்கள் உம்மை
இவ்வுலகில் காணவே!

உமது பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள்.**

*கற்பகப்பிள்ளையார் கோயிலடி,*
*பலாலி வீதி,*
*உரும்பிராய்.*

(78263)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 — 11 — 1928



மறைவு 13 — 08 — 2000

**திருமறை இரத்தினம் வைரமுத்து**

(11-09-2000)

**தாயாகத் தந்தையாய் நல்லாசிரிய ராக**
**எம்மை வழிநடத்தி எம்குடும்பம் காத்தவரே**
**அம்மா! உன் மறைவால் அழுது புலம்புகிறோம்**
**என்றாலும் உன் ஆத்மா சாந்தி யடையட்டும்!**

அம்மா மறைந்த காலை எம்துயரில் கலந்து அனுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கு எமது நன்றியை நவிலுவதோடு இன்று நடைபெறும் சபிண்டீகரண நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

**நடிகமணி வி. வி. வைரமுத்து குடும்பத்தினர்.**

*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(78265)

---

## வாழ்த்துகின்றோம்

எமது நிறுவன பயிற்சி இயக்குநராகவும்
விரிவுரையாளராகவும் இதுவரை காலமும் சேவையாற்றிய
திருவாளர்
**ரி. இராஜரட்ணம்** அவர்கள்

எமது நிறுவனத்தின் முதலாவது அதிகாரம் கொண்ட இயக்குநராகத் தெரிவு செய்யப்பட்டதையிட்டு யாழ். உயர் தொழில் நுட்ப மாணவர் ஒன்றியமும் மாணவர்களும் தமது மனப் பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

*யாழ். உயர் தொழில் நுட்ப மாணவர் ஒன்றியம்,*
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

(78270)

---

அரச மத்திய மருந்தக அபிவிருத்திச் சபை
UNDP உதவியுடன் அமைக்கப்பெற்ற
உடுவில் மருந்தக

## புதிய கட்டட திறப்பு விழா

*காலம்:* இன்று (2000-09-11) திங்கட்கிழமை
*நேரம்:* காலை 10.30 மணி.

*தலைமை:* லயன். எஸ். கே. செல்வராஜா
*(முன்னாள் தலைவர், மானிப்பாய் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)*

*முதன்மை விருந்தினர்:* ஆ. மகாலிங்கம் SLAS
*(பிரதேச செயலர், வலி. தெற்கு).*

*கௌரவ விருந்தினர்:*
Dr. (செல்வி) உமா சிவபாதசுந்தரம்.
*(யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர்).*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- *நிர்வாகம்.*

விளம்பர அன்பளிப்பு:
*சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்*

(78266)

---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் 09 - 07 - 1957



விண்ணில் 11 - 09 - 1999

**அமரர் பேதுரு ஜோன் பத்திநாதர் (சிங்கம்)**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இரங்கல் திருப்பலி பருத்தித்துறை புனித தொம்மையார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

**அன்பு மனைவி, மாமியார்,**
**சகலன், மைத்துனி, பெறாமக்கள்.**

*கல்லூரிவீதி, பருத்தித்துறை.*

(C/12881)

---

## மரண அறிவித்தல்

### தமியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை

உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட தமியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை நேற்று (10-09-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தமியாம்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவசகாயம் மற்றும் சவுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும், ஞானமலர், தர்மகுலசிங்கம், புளோரன்ஸ், மரியகொலஸ்ரிக்கா, மேரி பிறேமாவதி, இராஜபஸ்தகர், மேரி அமற்றாஸ், வெனட் கொன்சன்ரைன், அல்றின் ஜெபர்சன் (ஜேர்மனி), சில்வேஸ்ரர் (சுவிஸ்), மரியகலா (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் செல்வசிங்கம் (கிளை முகாமையாளர், வலி. கி. தென் ப. ப.நோ. கூ. சங்கம், நீர்வேலி), சந்திராதேவி (சுவிஸ்), அந்தோனிப்பிள்ளை கொன்சி, அல்வினஸ், சாலினி, மார்த்தா (ஜேர்மனி), அருட்செல்வம் (டோகா), விஜி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருட்பிரகாசம், காலஞ்சென்ற அமலோற்பவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், எமியானுஸ்பிள்ளை, கியோமர், ராசா றோஸ்மணி, பேரின்பம், செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், யூட், ஜெனி, றாஜியா, டயானா, ஜெரோம், டயஸ், யஸ்மீனா, லீசானி, பிறின்ஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இன்று (11-09-2000) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராய் புனிதமிக்கேல் ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து இறுதி வழிபாட்டுடன் பூதவுடல் நல்லடக்கத்துக்காக உரும்பிராய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**ம. தர்மகுலசிங்கம்,**
(மகன் - குருசாமி)

*அனுபினிய தொழிற்சாலை,*
*காந்தன் றோட்,*
*உரும்பிராய் கிழக்கு.*

(78260)

# கொழும்புத்துறை, நுணாவில், சரசாலைப் பகுதிகளில் 8 மணி நேரம் நீடித்த 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை!

**இம்மாதம் 3ஆம் திகதி படையினரால் கொழும்புத் துறை, நுணாவில், சரசாலைப் பகுதிகளில் ஆரம்பிக் கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை 8 மணி நேரத்தில் முடிவடைந் ததாக நேற்று வெளியான 'சண்டேரைம்ஸ்' ஆங்கில வார இதழில் அதன் பாது காப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் தெரிவிக்கிறார். அவர் எழுதிய கட்டுரையின் சாரம்சம் இங்கே தமிழில் தரப்படுகின்றது.**

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக் கான தேர்தல் சூடு நாட்டைப் பீடித் திருக்க, மறுபுறத்தில் யாழ்ப்பாணத் தில் கடந்த 3 ஆம் திகதி மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக் கையில் (சூரியக்கதிர்) உயிரிழந்த 125 பேரின் உறவினர்கள் தம் இரத் தத்தின் இரத்தங்களின் மறைவை ஒட்டிய கவலையில் ஆழ்ந்திருந்த னர்.

யுத்தத்தில் வீரத்துடன் போரிட்டு மறைந்த தமது சகாக்களுடன் இவர் களின் பெயரும் சேர்ந்துகொள்ள மறு புறத்தில் 'வெற்றிகரமாக' மேற் கொள்ளப்பட்ட படை நடவடிக்கை யில் வீரத்துடன் போரிட்டு உயிரி ழந்த வீரர்கள் என்ற பட்டியலில் இவர்களின் பெயர்களையும் பாது காப்பு அமைச்சு இணைத்துக்கொள் ளும்.

## 100க்கும் அதிகமானோர் கைகால் இழப்பு

அது வெறுமனே 125 வீரர்களின் உயிர் வாழ்க்கை முடிவுடன் முடிந்து விடவில்லை. படுகாயமடைந்த 800 பேரில் 100க்கும் அதிகமானோர் கை, கால்களை இழந்துள்ளனர். அவர்க ளில் பலர் எதிர்காலத்தில் நடக் கவே முடியாதவர்களாகிவிட்டனர். மற்றும் சிலர் கைகளை இழந்து விட்டனர். பலர் மீண்டும் களத்துக் குத் திரும்ப முடியாத நிலையில் அங்கவீனர்களாகிவிட்டனர்.

ஒரு சம்பவத்தில் - அளவுக்கு மீறி சூடாகிய பீரங்கிச் சுடுகலன் வெடித்துச் சிதறியதில் அதற்கு அருகில் நின்ற இரு சிப்பாய்கள் அடையாளமே இல்லாமல் போய்விட் டனர்; சற்று அருகில் நின்ற மற் றொருசார்ஜண்ட், முண்டத்தின் சிறிய பகுதியோடு எஞ்சிக் கிடந்த அவரது [illegible]லை மூலம் அடையாளம் காணப் பட்டார்.

கடந்த ஏப்ரலில் புலிகள் கைப் பற்றிய பகுதிகளிலிருந்து அவர்க ளைத் துரத்துவதற்காக 51 மற்றும் 53ஆவது டிவிஷன்களைச் சேர்ந்த சுமார் ஐயாயிரம் படையினர் இந்த நடவடிக்கையில் பங்குபற்றினர்.

இந்த நடவடிக்கை வெற்றிகர மாக நடந்து முடிந்திருந்தால், அது இராணுவத்துக்கும் அரசுக்கும் மிக வும் செல்வாக்குத் தேடித் தருவ தாக அமைந்திருக்கும்.

புதிய மிலேனியத்தில் அந்த கைய வெற்றி, இழந்த தனது கௌர வத்தை மீண்டும் கட்டியெழுப்புவ தற்கு இராணுவத்துக்கு வழி சமைத் துக் கொடுத்திருக்கும்.

அரசுக்கு அத்தகைய இராணுவ வெற்றி, தேர்தல் பிரசாரத்தை எடுப் பாக ஆரம்பிக்க வழி செய்திருக்கும்.

ஆனால் அந்த இராணுவ நடவ டிக்கை துரதிர்ஷ்டவசமாகச் சோகத் தில் முடிவுற்றது.

## தாக்குதலுக்கு எப்படித் திட்டமிடப்பட்டது

பல்குழல் றொக்கட் லோஞ்சர் கள், பீரங்கிகள் மற்றும் மோட்டர்கள் உட்படப் புதிய ஆயுதங்கள் இராணு வத்துக்குக் கிடைத்ததை அடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளைத் துரத்துவதற்கான இந்த இராணுவ நடவடிக்கைக்கு முதலில் திட்டமிடப் பட்டது.

இதற்காக, எதிர்வரும் தேர்தல் பிரசாரங்களுக்கு மத்தியிலும் யாழ்ப் பாணத்துக்குச் செல்வதற்காக நேரம் ஒதுக்கினார் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த.

அங்குநடத்தப்பட்ட உயர் மட்ட பாதுகாப்பு மாநாட்டில், சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஜெனரல் தளு வத்த மற்றும் இராணுவம், விமானப் படை, கடற்படை ஆகியவற்றின் தள பதிகள் சகிதம் சிரேஷ்ட படை அதி காரிகள் தெரிவித்த கருத்துகள் மற் றும் அவர்களின் தேவைகளை அவர் கேட்டறிந்து கொண்டார்.

ரத்வத்த அணியினர் கொழும்பு திரும்பியதும் இராணுவ நடவடிக்

## இரு தரப்புகளுக்கும் பேரிழப்பு

கைக்கான சகல ஏற்பாடுகளும் முழு மூச்சில் மேற்கொள்ளப்பட்டன. தேவையான பொருள்கள், தளபா டங்கள் போன்றவை கப்பல் மூலம் அல்லது விமானம் மூலம் யாழ்ப்பா ணத்துக்கு அவசர அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டன; துருப்புகள் உரிய இடத்தில் அணிவகுக்கப்பட் டன. படையை விட்டுத் தப்பியோடி மீண்டும் கைதுசெய்யப்பட்ட அல் லது மீண்டும் திரும்பி வந்த துருப்பு களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அணிகளை மேலதிகமா கச் சேர்த்துக்கொண்டதன் மூலம் குடாநாட்டிலுள்ள படையணிகள் மேலும் வலுவூட்டப்பட்டன.

இந்த இராணுவ நடவடிக்கைக்கு என்ன பெயர் வைப்பது என்பதில் படை உயர் மட்டத்தில் கருத்து வேறுபாடு நிலவியது. சிலர் "OPERATION ROLLING THUNDER" என்று அல்லது "OPERATION THUNDER BOLT" என்று பெயரிட விரும்பினர் - பல்குழல் றொக்கட் லோஞ்சர்களின் தாக்கு தல் முக்கியமாகப் பயன்படுத்தப் படும் காரணத்தை முன்வைத்து -

யாழ்ப்பாணத்தை 1995இல் கைப் பற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட 'ரிவிரச' (Riviresa) என்ற பெயரில் - அதே 'சூரியப் பிரகாசம்' என்ற பொருள்பட - "OPERATION RIVIKIRANA" (சூரியக்கதிர்) எனப் பெயரிடப் படையிலுள்ள தேசியவாதிகள் பலர் விரும்பினர்.

இறுதியாக கடந்த 3ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு 'ரிவி கிரண' (சூரியக் கதிர்) நடவடிக்கை ஆரம்பமானது. படையினரின் கட் டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்திலி ருந்து கிழக்குப் பக்கமாக நகர்ந்து நாவற்குழி, சாவகச்சேரி மற்றும் அதிலிருந்து வடக்கேயுள்ள சரசா லைப் பகுதிகளைச் சுற்றிவளைத்து ஒரு பெரிய பிரதேசத்தைக் கைப்பற் றுவது அதன் நோக்கமாக இருந்தது.

கடந்த 30ஆம் திகதி முதல் 4 நாள்கள் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது விடாது நடத்தப்பட்ட ஆட்லறித் தாக்குதல்களைத் தொடர்ந்தே இந்த இராணுவ நட வடிக்கை 3ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டது.

விமான, பீரங்கி, ஷெல் தாக்கு தல்கள் முழங்க படையணிகள் இரு முனைகளில் நகர்வை ஆரம்பித்தன.

## மழைபோல் பொழிந்த ஷெல்கள்

சரசாலை மற்றும் அருகிலுள்ள நுணாவிலில் இருந்து ஓர் அணி சதுப்பு நிலங்கள் ஊடாக - தென் கிழக்குத் திசையில் - சாவகச்சேரி யின் கண்டி வீதிப்பகுதியை நோக்கி நகர ஆரம்பித்தது. மதியத்துக்குள் அவர்கள் ஒன்றரைக் கிலோ மீற்றர் எதிர்ப்பின்றி முன்னேறியதைப் பார்த்தபோது அவர்கள் முன்னேறுவ தற்கு புலிகள் இடமளிப்பதாகவே பட்டது.

ஆனால் திடீரென மழைபோல் பொழிந்த ஆட்லறி ஷெல்களினால் படையினருக்குப் பேரிழப்பு ஏற் பட்டது. பெரும்பாலானோர் உயிரிழந் தனர், அல்லது படுகாயமடைந்தனர். இந்த இழப்பு படையினரைப் பழைய நிலைகளுக்குப் பின்வாங்க வைத் தது.

மற்றைய நகர்வு கொழும்புத் துறைப் பகுதியிலிருந்து கிழக்குப் பக்கமாக அமைந்தது.

சுமார் அரை கிலோமீற்றர் தூரம் துருப்புகள் நகர்ந்ததுமே இங்கும் மிகத் தீவிரமான பீரங்கி, ஷெல் தாக் குதல்களை படையினர் எதிர்கொண் டனர். இதனால் வேறு வழியின்றி தமது நகர்வை அத்தோடு நிறுத்த வேண்டியதாயிற்று.

எதிர்பாராத இந்த தீவிர மோட்டர் தாக்குதல் - இராணுவப் புலனாய் வுத் தகவல்களின்படி முதல் ஒரு சில மணிநேரத்தில் மட்டும் பத்தாயி ரத்துக்கும் அதிகமான மோட்டார் ஷெல்கள் பொழிந்தமை - படைத் தரப்புக்கு பேரிழப்பை ஏற்படுத்தியது.

பெரும் எண்ணிக்கையில் துருப் புகள் பாதிக்கப்பட்டமை, காயம டைந்தோரை அப்புறப்படுத்துவதில் மிகப்பெரும் நெருக்கடியை படைத் தரப்புக்கு ஏற்படுத்தியது. காயம டைந்தோரை ஏற்றிச்செல்ல அம்பு லன்ஸ்கள் போதாமல் போயின. காரைநகர் கடற்படை முகாமிலிருந் தும் கூட அம்புலன்ஸ்கள் அவசர அவசரமாகத் தருவிக்கப்பட்டன.

ஆனால் மோசமாகப் பாதிக்கப் பட்ட சிப்பாய்களை பலாலியிலி ருந்து அநுராதபுரத்துக்கு அனுப்பும் முயற்சி கூட - வழமையாக அந்தப் பணியைச் செய்யும் 'அன்ரனோவ் - 32' ரக விமானங்கள் இரண்டும் இயந்திரக் கோளாறுக்குள்ளாகி திருத்த வேலைகளுக்காக அநுராத புரத்தில் தரித்து நின்றதால் - துர திர்ஷ்டவசமாகப் பாதிக்கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையை ஒட்டி, மல்வத்தை மற்றும் அஸ்கி ரிய பீடாதிபதிகளிடம் ஆசீர்வாதம் பெறச் சென்றிருந்த புதிய இராணு வத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல கூட கண்டி பல்லேகல்ல யிலிருந்து ஹெலி மூலம் அநுராத புரத்துக்கு வந்த பின்னர் விமான சேவையின்றி அங்கு காத்து நிற்க வேண்டியதாயிற்று. பின்னர் வேறு வழியின்றி - காயமுற்ற சிப்பாய்க ளைப் பலாலியிலிருந்து அநுராத புரத்துக்கு ஏற்றி வந்த - ஹெலி மூலம் அவர் பலாலி திரும்ப வேண்டி யதாயிற்று.

'ரிவிகிரண' (சூரியக்கதிர்) நடவ டிக்கை ஆரம்பிக்கப்பட்டு எட்டு மணித்தியாலங்களின் பின்னர் பேரி ழப்புக் காரணமாகக் கைவிடப்பட்டது.

## காயமடைந்தோர் படகு மூலமும் அனுப்பப்பட்டனர்

காயமடைந்த படையினரை ஏற்றி இறக்குவதற்கு, வேறு வழியில்லாத தால் இஸ்ரேல் தயாரிப்பு 'டுவோரா' ரோந்துப் படகுகள் மூலமும் அவர் கள் திருமலைக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

மாலையில் 'அன்ரனோவ் - 32' விமானங்கள் திருத்தப்பட்டதை அடுத்து காயமுற்றோரை பிற இடங் களுக்கு அனுப்பிவைக்கும் பணி ஞாயிறு இரவிரவாக மேற்கொள்ளப் பட்டு பூர்த்தியாக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் உயிரி ழந்த துருப்புக்களின் எண்ணிக்கை 125க்கு அதிகம் என்று கூறப்பட்டா லும் அது குறித்து இன்னும் சர்ச்சை நிலவுகின்றது. நடவடிக்கைத் தலை மையகம் விடுத்த இரு செய்திக் குறிப்புகளின்படி எட்டு அதிகாரிகள் உட்பட 114 படையினர் உயிரிழந் துள்ளனர்.

ஆனால் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் தகவல்களின்படி - யுத்தக் களத்திலும் பின்னர் காயங்கள் காரணமாகவும் உயிரி ழந்த துருப்புகளின் எண்ணிக்கை இருநூறுக்குக் கிட்டவாக உள்ளது.

ஆகக் குறைந்தது 125 பேர் உயி ரிழந்ததையும் எண்ணூறுக்கு அதிகமானோர் படுகாயமடைந்துள் ளதையும் உறுதிப்படுத்த முடிந்தது.

## புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பு

புலிகளின் தொலைத்தொடர்பை வழிமறித்துக் கேட்ட இராணுவப் புலனாய்வுத் தகவல்களின்படி -

மட்டக்களப்பின் 'சார்ளி அக்கா' அணியைச் சேர்ந்த ஆகக் குறைந் தது 12 பெண் உறுப்பினர்கள் உட் பட - பெயர் குறிப்பிட்டு அடையா ளம் காணப்பட்டுள்ள 115 பேரை இந்தச் சண்டையில் புலிகள் இழந் துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி குறுகிய காலத்தில் 'உயிரிழந்த' இந்த இரா ணுவ நடவடிக்கைதான் கடந்த 5 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற பாதுகாப் புக் கவுன்ஸில் கூட்டத்தில் சூடு பறக்கும் [illegible]யமாக அமைந்தது.

படைகளுக்குத் தேவையான சக லதையும் நாட்டுக்குப் பெரும் பொருள் செலவுடன் வாங்கிக் குவித்து உதவி வரும் ஜனாதிபதி சந்திரிகா - முப்படைகளின் தளபதி என்ற முறையில் - இந்த இராணுவ நடவடிக்கை எங்கு பிழைத்துப் போனது என்பதை இந்தக் கூட்டத் தில் அறிய முயன்றார் என்பதைக் கூறத்தேவையில்லை.

இந்த நடவடிக்கையின் வெற் றியை உறுதிப்படுத்துவதற்காக நேரில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று ஆயத்த ஏற்பாடுகளை முன்னின்று மேற்கொண்ட அமைச்சர் அனுருத்த ரத்வத்ததான் இந்தக் கூட்டத்தில் கோபக் கனல் தெறிக்க காட்சி தந் தார். "எப்படிப் பிழைத்துப் போனது? யார் பொறுப்பு?" என்ற வினாவை அவர் தொடுத்தார்.

இந்தக் கேள்விக்கு அமைதி யாக - ஆனால் கூர்மையாகப் - பதில் தந்தார் பாதுகாப்புப் படைக ளின் சிரேஷ்ட அதிகாரி ஜெனரல் றொஹான் தளுவத்த. இப்போது

(12ஆம் பக்கம் பார்க்க)


**MEMORIAL SERVICE**
**MARY ELIAS**

A Service of thanksgiving for the life & Service of Late Ms. Mary Elias former Supervisor, Junior School, Jaffna College will be held at the Cathedral, Vaddukoddai on Saturday 16th September 2000 at 3.30 p.m.
Past Students and friends are welcome.

**Principal.**

*Jaffna College,*
*Vaddukoddai.*

(C/12888)



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



தோற்றம் 1919 - 11 - 27

மறைவு 2000 - 08 - 13

**அமரர் திருமதி செல்லையா செல்லம்மா**
(கிழக்கு அரியாலை)

நாளை (12-09-2000) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன வைபவத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலச் சூழ்நிலை காரணமாக இந்த அழைப்பினை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*65, நெடுங்குளம் வீதி,*
*அரியாலை.*

சே. பாலசுந்தரம்
(மகன்)
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*தற்காலிக முகவரி:-*
*127/14, கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*(UNDP காரியாலய அருகு ஒழுங்கையிலுள்ள யாழ். நில அளவைத் திணைக்களம் அருகில்)*

(78275)



**சுயேச்சைக் குழு - இல. 6**

★ போரை நிறுத்திப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி இனப்பிரச்சினையைத் தீருங்கள்!

★ எமது மக்களை வாழ விடுங்கள் என்பதை நாடாளுமன்றத்திலும் உலக அரங்கிலும் நேர்மையுடனும், நெஞ்சுரத்துடனும் வலியுறுத்த

சட்டத்தரணி நல்லதம்பி சிறீகாந்தா

தலைமையில் போட்டியிடும்

சுயேச்சைக் குழுவை ஆதரியுங்கள்!



X

(C/12876)

## ஆங்கில தின போட்டிகள் ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டமட்ட ஆங்கிலத்தினப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளபோட்டிகளில எழுத்துப்போட்டிகள் 18ஆம் திகதியும் வாய் மூலப் போட்டி19ஆம் திகதியும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## இலங்கைத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'பக்ஸ்' செய்தியிலேயே இப்படிக் கோரியுள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது :-

கடந்த ஜூலை மாதம் 28ஆம் திகதி தங்களை நேரில் சந்தித்த சமயம், அகதி அந்தஸ்துக் கோரி சமர்ப்பித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களை உடன் நாடு கடத்த வேண்டாம் எனக்கேட்டிருந்தோம். தற்சமயம் இலங்கையில் நிலவும் பாதுகாப்பற்ற நிலைமை காரணமாகவே இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தோம்.

தற்சமயம் அகதி அந்தஸ்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, நாடு கடத்தப்படவிருந்த நால்வர் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர். மேலும் இரு இளைஞர்கள் அவர்களுடன் இணையவிருப்பதாக அறிகின்றேன்.

எனவே மனிதாபிமான அடிப்படையில் அணுகி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை நாடுகடத்துவதை பிற்போடுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குமாறு கோருகிறோம் - என்றுள்ளது.

(இ-3)

## அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ளனர் என்றும் -

புலிகளின் தற்கொலைப் பிரிவைச் சேர்ந்த பலர் கொழும்பிலும், தெற்கின் பல பகுதிகளிலும் ஊடுருவியுள்ளனர் என்றும் -

பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவினர் அரசியல் தலைமைக்குத் தெரிவித்ததை அடுத்தே இந்த மாநாடு அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முப்படைத் தளபதிகளும், பொலீஸ்மா அதிபரும் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் இன்றுள்ள நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா, ஏ.எச்.எம்.பௌஸி உட்படப் பல சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களை புலிகள் இலக்கு வைத்துள்ளனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் இந்த மாநாட்டில் எடுத்துக் கூறினர்.

சிரேஷ்ட அமைச்சர்கள் பங்குபற்றும் கூட்டங்களுக்கு கடும் பாதுகாப்பு வழங்குவதெனவும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்களுக்கு குண்டு துளைக்காத வாகனங்களை உடன் பெற்றுக்கொடுப்பது என்றும் -

பிரசாரக்கூட்டங்களின் போது மேடையிலிருந்து நூறு யார் தூரத்துக்கு அப்பால் பொதுமக்களை நிறுத்துவது என்றும் - மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

அமைச்சர்களோ, அரசியல் கட்சித் தலைவர்களோ எக்காரணம் கொண்டும் பொதுமக்கள் நிற்கும் பகுதிக்குள் செல்லக்கூடாது என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் - பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா, அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி உட்பட சில சிரேஷ்ட அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் உடனடியாக குண்டு துளைக்காத வாகனங்களை வழங்கியுள்ளனர்.

## பொ.ம.ஐ. முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஐக்கிய முன்னணி அமைப்பாளர் மனோகரன்பிள்ளையின் வீட்டில் வைத்தே இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் செழியன் பேரின்பநாயகம், மனோகரன்பிள்ளையின் பாண்டிருப்பில் உள்ள வீட்டுக்கு வந்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார் எனவும் அவ்வேளை அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த அறைக்குள் திடீரென புகுந்த நீளக் காற்சட்டை அணிந்த இனந்தெரியாத இளைஞர்கள் மூவர் அவர்களுடன் பேசவேண்டும் என்று கூறி முன்னறைக்குள் அழைத்துச் சென்ற சில நிமிடங்களில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வீட்டிலிருந்தவர்கள் சென்று பார்த்தபோது செழியனும் மனோகரன்பிள்ளையும் நெற்றியில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

### வாக்குமூலம்

இறந்த மனோகரன்பிள்ளையின் வளர்ப்பு மகளும் மருமகளுமான கந்தசாமி விஜயலட்சுமி (வயது 24) பொலீஸாருக்கு வாக்குமூலம் அளிக்கையில் தெரிவித்ததாவது:-

கடந்த இரு தினங்களுக்கு முன்னரும் மனோகரன்பிள்ளையைச் சந்திப்பதற்காக முன்னாள் மேயர் செழியன் வந்திருந்தார். இன்று (10.09.2000) காலை 10 மணியளவிலும் அவர் எமது வீட்டுக்கு வந்து மனோகரன்பிள்ளையுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது பின்வழியால் வந்த சுமார் 35வயது மதிக்கத்தக்க ஒருவரும், இரு இளைஞர்களும் அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த அறைக்குள் நுழைந்தனர்.

மனோகரன்பிள்ளையைச் சந்திப்பதற்கு அடிக்கடி பலர் இவ்வாறு வந்து செல்வதால் வந்தவர்களை இட்டு நாம் சந்தேகம் கொள்ளவில்லை. வந்தவர்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்த இருவரையும் முன்னறைக்கு வருமாறு கூறியதைக் கேட்டேன். சில நிமிடங்களில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. ஓடிச்சென்று பார்த்தபோது முன்னறையில் மனோகரன்பிள்ளையும் செழியனும் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். வந்த மூவரையும் காணவில்லை.

வந்த நபர்களை நேரில் கண்டால் அடையாளம் காட்டமுடியும் - என்று கூறினார்.

மனோகரன்பிள்ளை அப்பிரதேசத்தின் திடீர் மரண விசாரணை அதிகாரியுமாவார்.

கல்முனை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் சேனநாயக்கா, கல்முனை தலைமையகப் பொலீஸ் பொறுப்பதிகாரி செறகன் பெரேரா, தேர்தல் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.இப்ராகிம் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து விசாரணைகளை நடத்தியதுடன் விசேட அதிரடிப் படையினர் விசேட பாதுகாப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை - முன்னாள் மேயரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளருமான செழியன் ஜே.பேரின்பநாயகத்தின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை அவரது சொந்த ஊரான மண்டூரில் நடைபெறுமென அவரின் பாரியார் திருமதி மனோன்மணி பேரின்பநாயகம் தெரிவித்தார்.

கொலையுண்ட செழியன் பேரின்பநாயகம் மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமாவார். இவர் தினகரன் பத்திரிகையில் நீண்டகாலமாக அலுவலகச் செய்தியாளராகப் பணிபுரிந்தவர். அதன் பின்னர் அரசியலில் பிரவேசித்தார். ரெலோவின் சார்பில் போட்டியிட்டு மட்டக்களப்பு மேயராகப் பதவி வகித்தார்.

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரான இவரது மறைவு குறித்து மேற்படி சங்கம் அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

(அ-14)

## சூரியக்கதிர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைப் பகுதியை விஸ்தரிக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கையின்போது -

கொழும்புத்துறை பகுதியிலிருந்து கண்டி வீதியில் நாவற்குழி பகுதியை நோக்கி ஒரு படையணி முன்னேறியது. சுமார் அரை கிலோமீற்றர் முன்னேறிய அந்த அணி புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக அதற்கு மேல் நகர முடியாமல் போய்விட்டது.

மறுபுறத்தில், சரசாலை அருகிலுள்ள நுணாவில் பகுதிகளில் உள்ள தமது முன்னரங்க நிலைகளை உடைத்துக்கொண்டு, சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரம் - கண்டி வீதியை நோக்கி - முன்னேறிய மற்றைய படையணியும் புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக பழைய நிலைகளுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

இவ்வாறாக இந்தப் புத்தாயிரமாம் ஆண்டில் தாம் ஆரம்பித்த முதலாவது பெரும் இராணுவ நடவடிக்கையை எட்டு மணி நேரத்தில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நிலை படைத்தரப்புக்கு ஏற்பட்டது.

இந்த நடவடிக்கையில் 125க்கு மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும் 800க்கும் அதிக படையினர் காயமடைந்தனர் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்படி சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் நேற்றைய இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-உ)

## கொழும்புத்துறையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் அரியாலை ஊடான புலிகளின் விநியோகப்பாதை துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இநத இராணுவ நடவடிக்கையின்போது பாதுகாப்புப் படையினர் தரப்பில் 12பேர் கொல்லப்பட்டனர்; 32 பேர் காயமடைந்தனர்; 30 பேர் சிறுகாயங்களுக்குச் சிகிச்சை பெற்றனர் என்றும் -

புலிகளின் தரப்பில் 70முதல் 75 வரையானோர் கொல்லப்பட்டனர் என்றும் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அரியாலை கிழக்குக்குச் சமீபமாக கடலில் விடுதலைப்புலிகளின் நான்கு படகுகளை கடற்படையினர் அழித்துவிட்டனர் என்றும் நடவடிக்கைத் தலைமைச்செயலகத்தின் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய மோதல் குறித்து புலிகள் தரப்பில் இருந்து தகவல் எதுவும் வெளியாகவில்லை

அதேவேளை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும்-

படையினரின் முன்னணிக் காவலரண்களுக்கு அப்பால் நேற்று புலிகளின் பங்கர்களை அழிக்க மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது புலிகள் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் நால்வர் காயம் அடைந்ததாகவும் நடவடிக்கை தலைமையகத்தின் இன்னொரு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


SUBRA (14)

சித்தன்கேணி.

SPOKEN ENGLISH and GRAMMAR

பிரிவு II

புதிய பிரிவு: நாளை 12-09-2K காலை 6.30 மணி.

By:- BRITTO

எமது நிறுவனத்தில் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி இலவசம்

(78268)


## இராணுவ நடவடிக்கை...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வகுத்து முன்னெடுக்கும் அதிகாரி அவர்தான்.

இதற்குத் தாமே பொறுப்பு என்று கருதப்பட்டால் தமது ஓய்வுக்கான பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தாம் தயார் என்று அவர் கூறினார்.

உடனடியாகக் குறுக்கிட்ட அமைச்சர் ரத்வத்த தாம் தனிப்பட்ட விதத்தில் குற்றச்சாட்டு எதனையும் கூறவில்லை என்றும் எனினும் இத்தகைய இழப்பை ஏற்படுத்தும் ஓர் இராணுவ நடவடிக்கைக்கு எவராவது பொறுப்பேற்க வேண்டும் என்பதையே வலியுறுத்துவதாகவும் கூறி நிலைமையைச் சமாளித்தார்.

ஓய்வுபெற்றுச் செல்லும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறிலால் வீரசூரியவுக்கு அலரிமாளிகையில் அன்றிரவு ஜனாதிபதி வழங்கிய பிரிவுபசார விருந்திலும் இந்த இழப்பின் தாக்கம் பற்றிய விடயங்கள் எதிரொலித்தன.

அடுத்த நாள் 6ஆம் திகதி முப்படைத் தளபதிகளும் யாழ்ப்பாணத்துக்கு நேரில் சென்று நிலைமையை அவதானித்து 'ரிவிகிரண' (சூரியக் கதிர்) நடவடிக்கைக்குப் பின்னான நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் மாலையில் கொழும்பு திரும்பினர்.

கடந்த 3ஆம் திகதி படித்த பாடத்துடன் யாழ்ப்பாணத்தில் எதிரிகள் மீதான அழுத்தத்தைத் தொடரும்படி அங்குள்ள சிரேஷ்ட படை அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனை -

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெரும் தாக்குதலுக்குப் புலிகள் தயாராவது பற்றிய புலனாய்வுத் தகவல்களின் பின்னணியில் வழங்கப்பட்டிருக்கின்றது. எதிர்வரும் பொதுத் தேர்தலைக் குழப்பும் புலிகளின் திட்டத்தில் இந்தத் தாக்குதல் முக்கியமானதாக அமையக்கூடும். (உ)


### முக்கிய பொதுக்கூட்டம் BIT

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட BIT தேர்வுப் பரீட்சைக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை முடிவுகளை எமது நிறுவனத்தில் பார்வையிடலாம். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான பிரத்தியேகக் கடிதங்கள் இன்று திங்கள் முதல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து தேர்வுசெய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்குமான முக்கிய கூட்டம் எதிர்வரும் புதன் கிழமை (13/09/2K) காலை 11.00 மணிக்கு IIS தலைமை அலுவலகத்தில் இடம்பெறும். அனைத்து மாணவர்களும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(C/12891)

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.



4ஆவது புதிய பிரிவு

ஆரம்பம்:- 14-09-2000 வியாழன் மாலை 4 மணி.

Thursday / Tuesday } 4 p.m. - 5 p.m.

SPOKEN ENGLISH with GRAMMAR

Lectures By:- Mr. M.A.HARI

★ அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

DIRECTOR,
HARY'S INSTITUTE,
KONDAVIL EAST - KONDAVIL. (78255)


## மரண அறிவித்தல்

### திருமதி துரைராஜசிங்கம் அருளம்மா

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி துரைராஜசிங்கம் அருளம்மா 09-09-2000 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரத்தினம் துரைராஜசிங்கத்தின் (இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஜயரத்தினம் விசாலாட்சியின் அன்பு மருமகளும், இராஜசிங்கம்(லண்டன்), சுகிர்தலக்ஷ்மி(லண்டன்), ஜெயபாலசிங்கம்(கனடா), விஜயலக்ஷ்மி(குஞ்சு, கொக்குவில்), செல்வகுமார்(கனடா), செல்வேந்திரன்(லண்டன்), மாலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு அன்புத் தாயாரும், வேலாயுதம் அவர்களின் சகோதரியும், மொறின்(லண்டன்),ஜெயராஜா(லண்டன்), சாரதா (கனடா), சிவராஜலிங்கம்(சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்), அனுசியா(கனடா), தெய்வா(லண்டன்), தெய்வேந்திரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், டொனால்ட், டக்ளின், டேமியன், மீரா, ஜீரா, கௌசிகா (அனைவரும் லண்டன்), பாமினி, துஷி, கஜித்திரா, மிஜித்திரா, துசாந்தி, அனித்(அனைவரும் கனடா), சிவப்பிரியா(யாழ். இந்துமகளிர் கல்லூரி மாணவி), ரஞ்சிதா, லக்ஷி(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்), கரன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்) ஆகியோரின் பேர்த்தியும்,வி.குணம், வி.நவரட்ணம்(சிங்கப்பூர்), வி.சுந்தரராமநாதன் (யாழ்ப்பாணம்), ஜீவரட்ணம், விஜயம்(கனடா), காலஞ்சென்ற பூரணம் இராமலிங்கம் ஆகியோரின் அன்பு அண்ணியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-09-2000 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

தகவல்:
தெ.சிவராஜலிங்கம்
( மருமகன்)

*87, பொற்பதி வீதி,*
*கொக்குவில்.*

(78282)


ஈழமெங்கும்
எங்கள் இதய வீணை ஒலித்திட
அளித்திடுவோம் எங்கள் வாக்குகளை
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு!

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



X

(ஈ.பி.டி.பி.)

(78283)

ஈ.பி.டி.பி. எடுத்த முயற்சியை அடுத்து யாழ்.மாவட்டத்தில் மாதாந்த வருமானம் 1500 ரூபாவுக்கு குறைவாகக் கொண்ட 5480 குடும்பங்கள் மீளக்குடியமர, வீடமைப்பு நிதியாக இவ்வாண்டு 13 கோடியே 70 லட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-09-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.